பக்கங்கள்: 11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 19 புதன்கிழமை 06.10.2021 கதிர் 335


**இது ரகசியம் அல்ல!**

கோட்டாபய அரசு சீன உறவைக் கொஞ்சம் தள்ளி வைத்துவிட்டு இந்திய, அமெரிக்க பக்கம் சாய்கின்றது என்ற சாரப்பட இந்தப் பத்தியில் நான் குறிப்பிட்ட விடயம் பல மட்டங்களிலும் தீவிரமாக பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு, நுணுகி

பக்கம்02 »

# அரசின் கோர முகத்தை அம்பலப்படுத்தி நிற்கும் சிறுவர் படுகொலைகள்!

## சிறீதரன் எம்.பியின் ஆவேசப் பேச்சால் நாடாளுமன்றத்தில் கூச்சல், குழப்பம்



தமிழீழத் தேசியத் தலைவராகத் தமிழர்கள் தம் நெஞ்சில் வைத்துப் பூசித்த வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளையமகன் என்ற ஒற்றைக் காரணத்தினாலேயே பன்னிரண்டு வயதுப் பாலகனான பாலச்சந்திரனை இந்த இனவெறி அரசு கோரமாகப் படுகொலை செய்தது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சபையில் நேற்று குற்றஞ்சாட்டினார். இதற்கு அரச தரப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் சபையில் கடும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

☞ 11

# சந்திப்புகளை முடித்துவிட்டு டில்லி திரும்பினார் ஷ்ரிங்லா

நான்கு நாள்கள் உத்தியோக பூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்லா நேற்றுப் பிற்பகல் புதுடில்லி திரும்பினார்.

அவர் இலங்கையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், மனோ கணேசன் தலைமையிலான தமிழ்

☞ 11

# பரீட்சைகளை ஒத்திவைக்க கல்வி அமைச்சு ஆலோசனை

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஆகியவற்றை ஒத்திவைக்க நேரிடும் என்று கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சபையில் தெரிவித்தார்.

புலமைப்பரிசில் மற்றும் உயர்தரப் பரீட்சை நடத்துவது குறித்து கல்வி அமைச்சும், பரீட்சைகள் திணைக்களமும் விரைவில் விளக்கம் அளிக்கும்

☞ 11

# சீனாவுடனான உறவு குறித்து சந்தேகம்கொள்ள வேண்டாம்

## இந்திய வெளியுறவு செயலரிடம் கோட்டா தெரிவிப்பு



இணக்கப்பாடுகளுடன் எட்டப்படும் இருதரப்புத் தீர்மானங்களை இரு நாடுகளினது மக்களுக்குச் சரியான முறையில் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

☞ 2

# பட்டா ரக வாகனம் மோதி முதியவர் பரிதாப மரணம்

## சாவகச்சேரியில் நேற்றிரவு சம்பவம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., தென்மராட்சியின் சாவகச்சேரி நகர் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சாவச்சேரியிலிருந்து கொடிகாமம் நோக்கி சைக்கிளில் பயணித்த முதியவரை

☞ 11

# யாழ்.பல்கலை நிகழ்நிலை பட்டமளிப்பு விழா நாளை!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக 35 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது அமர்வு நாளை வியாழக்கிழமை நிகழ்நிலையில் நடைபெறவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன என்று யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இம்மாதம் 7 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை பட்டமளிப்பு விழாவை நடத்துவதற்குத்

☞ 11






# மேலும் 40 பேர் மரணம்

இலங்கையில் மேலும் 40 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை

☞ 11

# நேற்று தொற்று 782

இலங்கையில் நேற்று 782 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த

☞ 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆராயப்படுவதாக அறிய வந்தது. ஆச்சரியத்துக்கு உரியதாகவும் இருந்தது.

சேதனப் பசளையை மட்டுமே பாவிப்பது, அசேதன உரங்கள், இரசாயன கிருமிநாசினிகள் போன்றவற்றைப் பாவிப்பதில்லை என்ற அரசின் முடிவை அடுத்து நாட்டில் சேதனப் பசளைக்குத் தட்டுப்பாடு – பற்றாக்குறை – ஏற்பட்டது தெரிந்ததே. அதையடுத்து சீனாவில் இருந்து சேதனப் பசளையை இறக்குமதி செய்ய முடிவு எடுக்கப்பட்டு, சீனத் தரப்பால் மாதிரி பசளை ரகங்களும் அனுப்பி வைக்கப்பட்டன. அவற்றைப் பரிசீலித்த இலங்கையின் நிபுணர்கள் அவற்றில் சில நுண்ணுயிரிகள் இருக்கின்றமையால் அந்த மாதிரி ரக சேதனப் பசளைகளை இறக்குமதி செய்ய முடியாது, இறக்குமதி செய்யக் கூடாது எனத் தெரிவித்து விட்டனர்.

இலங்கையின் இந்த முடிவு, சீனத் தரப்பை பெரும் சீற்றத்தில் ஆழ்த்தியிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன.

இலங்கையின் இந்த முடிவு தொடர்பாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்தா அளுத் கமகேக்கு கடிதம் எழுதிய சீனத் தூதுவர், இலங்கையின் இந்த அணுகுமுறை இரு நாட்டு உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற கருத்துப் படக் குறிப்பிட்டிருக்கின்றார் எனவும் கூறப்படுகின்றது.

நிபுணர்களின் ஆய்வு முடிவு அப்படி இருப்பதால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று சீனத் தூதுவருக்கு பதில் எழுதியுள்ள அமைச்சர், எதற்கும் இன்னொரு தடவை சோதனை செய்வதற்குத் தாம் நிபுணர்களுக்கு உத்தரவிடுகின்றார் என்றும் தெரிவித்திருக்கின்றார்.

தேவைப்பட்டால் சேதனப் பசளையைத் தாங்கள் இந்தியாவில் இருந்தும் இறக்குமதி செய்யப் பின் நிற்க மாட்டோம் என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த ஆளுத்கமகே நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்.

கொழும்பு அரசின் போக்குத் தலைகீழாக மாறுவதை அமைச்சரின் நாடாளுமன்ற விளக்கமே உறுதிப்படுத்துகின்றது.

இதற்கிடையில் –

இலங்கைக்கு சீன இதுவரை வழங்கியது உதவியா? உபத்திரமா? – என்று கொழும்பில் ஒரு தரப்பு விரிவாக ஆராயப் புறப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

★ கொவிட் தடுப்பூசியை இலங்கைக்கு விற்ற விலையில் அரைவாசி விலைக்கு பங்களாதேஷுக்கு வழங்கியுள்ளது சீனா.

★ பங்களாதேஷின் 97 வீதமான உற்பத்திப் பொருள்களை கடந்த ஆண்டு ஜுலை முதலாம் திகதியிலிருந்து விசேட வரி விலக்குச் சலுகையுடன் தன் நாட்டில் இறக்குமதி செய்யும் ஆதரவை சீனா முழு அளவில் வழங்கியுள்ளது. ஆனால் இலங்கையுடன் திறந்த வர்த்தகத்துக்கான ஓர் உடன்பாட்டைக் கூட சீனா இது வரை செய்யவில்லை.

★ மாலைதீவு தனது கடனைத் திருப்பச் செலுத்த முடியாது தடுமாறிய போது, தவணைக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு போதிய கால அவகாசத்தை கடந்த ஆண்டு ஜுனில் தாராளமாக வழங்கியது சீனா. ஆனால் இலங்கைக்கு கடன் வழங்குவதில் முன்னணியில் இருக்கும் சீனா, இலங்கை தடுமாறிய போது அத்தகைய கால அவகாசத்தையோ, விட்டுக் கொடுப்பையோ இலங்கைக்குச் செய்யவேயில்லை.

★ நேபாளத்துக்கு, நன்கொடை, வட்டியில்லாக் கடன், சலுகைக் கடன் என்று அள்ளிக் கொட்டும் சீனா, இன்றைய நிலையில் அறுநூறு கோடி டொலர் (அதாவது ஒரு லட்சத்து முப்பதாயிரம் கோடி ரூபா) கடன் நிலுவையை வழங்க வேண்டியிருக்கும் இலங்கைக்கு எந்தச் சலுகையையும் காட்டவில்லை. இந்தத் தொகை உச்சபட்ச வட்டியுடன் வழங்க வேண்டிய நிலுவையாகும். இப்போதுதான் கொழும்பு ஒரு சீனக் குழு வந்து திரும்பிய பின்னர் 9 கோடி டொலர் நன்கொடைத் திட்டம் ஒன்று சீனாவினால் இலங்கைக்குக் கிட்டுகின்றது.

இன்றைய நிலையில் சீனா எந்த உதவியை இலங்கைக்கு அளிக்க வந்தாலும், அவை எல்லாம் பின்னால் இலங்கையிடமிருந்து பெரியளவில் பிடுங்கி, அதனைச் சிக்கலில் மாட்டும் திட்டத்தையே கொண்டுள்ளன என்று விடயமறிந்த வட்டாரங்கள் விளக்குகின்றன.

சீனா வழங்கிய கடன் திட்டங்கள் எல்லாம், 'தவிச்ச முயல் அடித்த மாதிரி' கடன் நெருக்கடியில் சிக்கித் திணறிக் கொண்டிருந்த இலங்கையை சமய சந்தர்ப்பம் பார்த்து வலையில் வீழ்த்திய நடவடிக்கை என்பதை கொழும்பு இப்போது உணரத் தலைப்பட்டுள்ளது.

சீனாவின் கடன் பொறித் திட்டத்தின் மோசமான பாதிப்புகள், விளைவுகள், அபாயங்களைப் புரிந்து கொண்டுள்ள கொழும்பு இப்போது அணி மாறலுக்கு – நிலைப்பாட்டு மாறலுக்கு – உட்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வளவு நெருக்கடிக்கு மத்தியிலும் சீனாவைப் போல பல மடங்கு பொருள்களை இலங்கையிடமிருந்து இந்தியா இறக்குமதி செய்து கொழும்புடன் தனது வர்த்தக சமநிலையை ஆரோக்கியமாக இந்தியா பேணுகின்றது என்பதை கொழும்பு உணரத் தலைப்பட்டிருக்கின்றது.

எது, எப்படி என்றாலும் கொழும்பின் போக்கில் ஏற்படக்கூடிய தலைகீழ் மாற்றம் மீண்டும் ஈழத் தமிழர்களை நடு வீதிக்குக் கொண்டு வந்து விடும் என்பது மட்டும் நிச்சயம். பாவம் தமிழர்கள்.

– மின்னல் –

## சீனாவுடனான உறவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சீனாவுடனான தொடர்புகள் பற்றி மிகத் தெளிவாக எடுத்துரைத்த ஜனாதிபதி, அது தொடர்பில் எவ்வித சந்தேகமும் கொள்ள வேண்டாம் என்றும் இந்திய வெளிவிவகாரச் செயலாளரிடம் கேட்டுக்கொண்டார்.

நன்மை, தீமைகளை எடுத்துரைத்து, பெரும்பான்மையான மக்களின் விருப்பத்துடன் செயலாற்றுவது அத்தியாவசியம் என்றும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

இந்திய வெளிவிவகாரச் செயலாளருடன் நேற்று முற்பகல், ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில், 1960, 1970ஆம் நூற்றாண்டுகளில் காணப்பட்ட நட்புணர்வு மற்றும் தொடர்புகளை மீளக் கட்டியெழுப்புவதன் அவசியம் பற்றி ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

1971இல், இந்து சமுத்திரத்தை சமாதான வலயமாக மாற்ற வேண்டுமென்று, அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க முன்வைத்த யோசனையைச் செயற்படுத்துவதற்கான பலத்தை அதிகரித்துக்கொள்ள, இந்தியாவின் உதவியை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கு இடையிலான தொடர்புகளை உயர் மட்டத்துக்குக் கொண்டு செல்ல வேண்டுமாயின், குறுகிய மற்றும் நீண்டகாலத் தேவைகளின் பொருட்டு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைத் துல்லியமாக அடையாளம் காணவேண்டுமென்பது, இரு தரப்பினதும் கருத்தாக அமைந்திருந்தது.

தற்போது காணப்படும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை விரைவாக அடையாளம் காண்பதுடன், மீனவச் சமுதாயத்துக்குக் கிடைக்கவேண்டிய நன்மைகளைப் பெற்றுக்கொடுத்து, இரு நாடுகளினதும் மீனவர்கள் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

இரு நாடுகளுக்கு இடையில் காணப்படும் வர்த்தக ஏற்றத்தாழ்வுகள் தொடர்பிலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, அவற்றுக்கு விரைவில் தீர்வு வழங்க வேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணக் கோட்டையை மீட்ட தனது அனுபவத்தை எடுத்துக்கூறிய ஜனாதிபதி, காணாமற்போனோர், போர் காரணமாக கணவரை இழந்தோர் உள்ளிட்ட போரின் பக்க விளைவுகள் பற்றி, தான் நல்ல புரிதல் கொண்டிருப்பதாக எடுத்துரைத்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் பலவீனங்களைப் போன்றே அதில் காணப்படும் பலம் தொடர்பிலும் கண்டறிந்துச் செயற்படுவதன் தேவை தொடர்பிலும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

இலங்கையிலிருந்து சென்ற தமிழ் மக்களை மீண்டும் நாட்டுக்குத் திருப்பியழைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பது தனது எதிர்பார்ப்பென்று தெரிவித்த ஜனாதிபதி, அதற்காக அரசு முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களை வெற்றிகரமானதாக்கிக்கொள்ள, ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத் தொடரின்போது உரையாற்றி, புலம்பெயர் தமிழர்களுக்கும் வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ் மக்களுக்கும் பகிரங்க அழைப்பு விடுத்ததாகவும், ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவிடம் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

வடக்கு – கிழக்கு அபிவிருத்திக்காகத் தனது அரசு கடந்த காலங்களில் முன்னெடுத்திருந்த நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்திய ஜனாதிபதி, போர்க் காலத்தின்போது பாதுகாப்புத் தரப்பினரால் கைப்பற்றப்பட்டிருந்த காணிகளில் 90 சதவீதத்துக்கும் மேலானவை, அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று, காணாமற்போனோரது குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்த ஜனாதிபதி, போரால் ஏற்பட்ட ஏனைய பிரச்சினைகளுக்கும் உடன் தீர்வு வழங்குவதற்கான தேவை தொடர்பிலும் தெளிவுபடுத்தினார்.

இரு நாடுகளினதும் புவியியல் இருப்பிடம் தொடர்பில் தெளிவான புரிந்துணர்வு இருப்பின், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய எந்தவொரு செயற்பாட்டுக்கும் இலங்கையைப் பயன்படுத்திக்கொள்ள இடமளிக்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி கூறினார்.

சீனாவுடனான தொடர்புகள் பற்றி மிகத் தெளிவாக எடுத்துரைத்த ஜனாதிபதி, அது தொடர்பில் எவ்வித சந்தேகமும் கொள்ள வேண்டாம் என்று இந்திய வெளிவிவகாரச் செயலாளரிடம் தெரிவித்தார்.

இலங்கையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அதனால், இந்திய முதலீட்டாளர்களுக்கு பகிரங்க அழைப்பு விடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் தொடர்பான பிரச்சினையை, இரு நாடுகளுக்கும் பயனுள்ள வகையில் தீர்த்துக்கொள்ளும் பொறுப்பு, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கு இடையிலான சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பிலும், இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் முப்படையினருக்கு, இந்தியாவில் வழங்கப்படும் பயிற்சிகளை விரிவாக்குவது தொடர்பிலும், இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

மின்சாரத்தை அதிகளவில் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களை அடையாளம் கண்டு, இரு நாடுகளுக்கிடையில் மின்சாரக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

கொரோனாத் தடுப்பூசி ஏற்றல் தொடர்பில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பாராட்டிய இந்திய வெளிவிவகாரச் செயலாளர், கொரோனா கட்டுப்பாட்டுக்கு இலங்கை முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் மகிழ்ச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் நீண்ட நேர தெளிவுபடுத்தல் தொடர்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ள இந்திய வெளிவிவகாரச் செயலாளர், இரு நாடுகளுக்கும் இடையிலான கருத்துக்கள் சமனாக இருப்பதால், இரு நாடுகளுக்கு இடையிலான நட்புணர்வைத் தொடர்ந்து முன்னோக்கிக் கொண்டுசெல்ல முடியும் என்றும் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமரை இலங்கைக்கு இராஜாங்க விஜயமொன்றை மேற்கொள்ள அழைப்பதாகவும் இந்திய வெளிவிவகாரச் செயலாளரிடம் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## நேற்று தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எண்ணிக்கை 5 இலட்சத்து 22 ஆயிரமாக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 477 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 77 ஆயிரத்து 851ஆக உயர்வடைந்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.



# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.

**FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE**

1. Senior Professor/Professor of **Commerce/Financial Management/ Human Resource Management**

2. Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) in **Commerce**

Note:
For positions given in (2), special consideration will be given to those who have first degree in Computer Science/Information Communication Technology/ Information Technology/ Computer Information Systems/ Information Security/ Business Analytics/ Artificial Intelligence / Business Technology Management.

Those who wish to apply are strongly advised to visit our University Website **www.jfn.ac.lk** for all the relevant details including remuneration package and statutory benefits.

**Closing date:**
Applications should reach us on or before the date given below:

**Post of Senior Professor/Professor - 06.12.2021**
**Other posts - 05.11.2021**

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk.** Applicants are requested to send the prescribed application form downloaded from the University website with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to any branch of the Peoples Bank in favour of **University of Jaffna Collection Account Number : 970000090000387** of Bursar, University of Jaffna.

The candidates who apply for **more than** one post should submit **separate application** along with separate **Bank slip**. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Perfected applications and self evaluation with supportive documents for the **Post of Senior Professor/Professor** shall be sent to the **Vice-Chancellor, University of Jaffna, Sri Lanka** as required by the University Grants Commission Circulars Nos. 5/2015, 5/2015(i) (for Senior Professor), University Grants Commission Circulars Nos.916, 4/2014 and Establishments Circular No. 4/2010 (for Professor), (see **http://www.jfn.ac.lk/index.php/circular/**) with a covering letter.

Perfected applications for the **other posts** shall be sent to the **Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka** under registered post with the photocopies of statement of the Degrees and Service certificates. **Submission of Applications will not be entertained in person.**

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Application and referees reports should be in the relevant format. Illegible and Incomplete applications and applications received after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA,**
**SRI LANKA.**
**04.10.2021**


# மாகாணசபைத் தேர்தல்களைப் பிற்போடும் எண்ணம் அரசுக்கு ஒருபோதும் கிடையாது

## இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க அறிவிப்பு



மாகாணசபைத் தேர்தலை பிற்போடும் எண்ணம் அரசாங்கத்துக்கு ஒருபோதும் கிடையாதென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது இராஜாங்கஅமைச்சர்ரொஷான் ரணசிங்க மேலும் கூறியுள்ளவை வருமாறு -

கடந்த மார்ச் மாதமளவில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

எனினும் கொரோனா வைரஸ்தொற்று அச்சுறுத்தல் காரணமாகவே தேர்தல் தொடர்பில் கவனம் செலுத்த முடியவில்லை.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதன்பின்னர் மாகாணசபைத் தேர்தல் முறைமை தொடர்பாக நாடாளுமன்றத்தில் தீர்க்கமாக தீர்வு எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஏ.டி.எம். இயந்திரங்கள் உடைப்பு பெருந்தொகைப் பணம் கொள்ளை!

## ஒருவர் கைது

இரண்டு ஏ.டி.எம். இயந்திரங்களை உடைத்து 76 லட்சத்துக்கும் அதிகமான பணத்தை திருடிய ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

மேற்படி நபர் அநுராதபுரம் மற்றும் மின்னேரியா பகுதிகளில் ஏ.டி.எம். இயந்திரங்களை உடைத்தேன் என அவர் தெரிவித்துள்ளார். 30 வயதான அவர் எப்பாவல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட போது அவரிடம் இருந்து 29 லட்சம் ரூபா பணத்தை பொலிஸார் மீட்டனர். அத்துடன் 24 லட்சம் ரூபா பெறுமதியான லொறியையும், 9 லட்சம் பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்றையும், மின்னணு பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# யானைகளின் அட்டகாசத்தால் அச்சத்தில் கிளிநொச்சி மக்கள்

கிளிநொச்சி- கல்மடுநகர் பகுதிக்கு வருகை தரும் யானைகள், பயன்தரக்கூடிய பயிர்களை அழித்து பாதிப்பு ஏற்படுத்துவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தினமும் இரவு வேளைகளில், மக்கள் குடியிருப்புகளுக்குள் வரும் யானைகள் இவ்வாறு பயன்தரக்கூடிய பயிர்களை அழித்துவருகின்றன என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறு அச்சத்தின் மத்தியில் ஒவ்வொருநாளையும் கடக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம் எனவும் இது தொடர் பாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மின்வேலி அமைத்துதருகிறோம் என பல வருடம் எம்மை ஏமாற்றிவரு கின்றனர் எனவும் மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எம்மையும் எம் உடமைகளையும் யானை அழித்தபின்னர், மின் வேலி அமைக்கப்படும் என மிக வேதனையுடன் தமது ஆதங்கத்தை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். ஆகவே, இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# கட்டுமானத் தேவைகளுக்காக மணல் பெறுவதில் யாழில் சிக்கல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கட்டுமானத் தேவைகளுக்கு மணலை பெறுவதில் உள்ள சிக்கல் நிலை தொடர்பில் யாழ். மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பிரதேச செயலர்கள் கலந்து கொண்டனர்.

குறித்த கூட்டத்தின் பின்னர் கருத்துரைத்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் -

யாழ்ப்பாண மாவட்டத்திலே கட்டுமானத் தேவைக்காக மணல் பெறுவதில் பல்வேறுபட்ட இடைஞ்சல்கள் சிக்கல்கள் காணப்படுகின்றன.

அத்தோடு மணல் விலையும் அதிகரித்து காணப்படுகின்றது. சட்டவிரோத மணல் அகழ்வும் இடம் பெறுகின்றது. இதனை நாங்கள் பலதரப் பட்ட கூட்டங்களை கடந்தகாலத்தில் நடத்தி சம்பந்தப்பட்ட தரப்பினருடன் சில தீர்மானங்களை எடுத்து இருக்கின்றோம். அதனடிப்படையில் மருதங் கேணி பிரதேசத்தில் காணப்படுகின்ற மணல் திட்டுக்களில் ஒரு குறிப்பிட்டவற்றை சூழலை பாதிக்காதவாறு அவற்றைப் பெற்று அபிவிருத்தித் திட்டங்களுக்கும் தனியார் கட்டுமானத் திட்டங் களுக்கும் பயன்படுத்த உதவுவதற் குரிய ஏற்பாடுகளை முன்னெடுத்து இருக்கின்றோம்.

இதிலே காணப்பட்ட பல விடயங்கள் பல பிரச்சினைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் ஆராய்ந்து அதன் அடிப்படையில் இவற்றை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்குரிய நடவடிக்கை எடுத்துள்ளோம்.

மாவட்ட செயலகம் மருதங்கேணி பிரதேச செயலகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய திணைக்களங்கள் மற்றும் அந்தக் கிராமங்களில் உள்ள கிராம அபிவிருத்தி சங்கத்துடன் இணைந்து பாரவூர்தி சங்கத்தினருடனும் இணைந்த வகையில் இந்த மணலை பெற்று பயன்படுத்தக் கூடிய ஒரு பொறிமுறையையும் அதற்குரிய திட்டங்களையும் ஏற்பாடு செய்து இருக்கின்றோம்.

அதன் அடிப்படையில் மணல் கோரிக்கை விடுத்துள்ளவர்களுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்குரிய மணலை வழங்கக்கூடிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். இந்த செயற்பாட்டில் அனைத்துத் தரப்பினரும் ஒருங்கிணைந்து ஒத்துழைத்து செயற்பட வேண்டும். - என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இன்று ஆசான்கள் தினம்

**இன்று ஆசிரியர்கள் தினம். இலங்கையில் இது ஒக்டோபர் 6ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது.**

**ஆனால் இது இந்தியாவில் செப்ரெம்பர் 5ஆம் திகதியே அனுஷ்டிக்கப்படுகின்றது. மறைந்த இந்திய ஜனாதிபதி சர்வபள்ளி இராதாகிருஷ்ணனின் பிறந்த தினமே அங்கு ஆசிரியர் தினமாகும்.**

**மாதா, பிதா, குரு, தெய்வம் என்றுதான் போற்றுகின்றோம் பிள்ளைகளுக்கு தாய் தந்தையருக்கு அடுத்து, தெய்வத்துக்கு முன்னதாகப் போற்றப்படும் – ஏத்தி மதிக்கப்படும் – நிலையில் உயர்வு படுத்தப்படுகின்றான் ஆசிரியன்.**

**அடுத்த தலைமுறையை நெறிப்படுத்துவதில் பிரதான பங்கு வகிக்கும் ஆசிரியத் தொழில் புனிதமானது.**

**வெறும் ஏட்டுக் கல்வியை மட்டுமல்லாது, தனது மாணவனுக்கு அவற்றை எல்லாம் தாண்டி, வாழ்க்கையை வாழக் கற்றுத் தருபவனே உண்மை ஆசிரியன். ஒழுக்கம், ஊக்கம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி, நேர்மைப் பண்பு முதலிய உயரிய குணாம்சங்களை மாணவனில் பொறித்து, அவனை வடிவமைக்கும் சிற்பி ஆசிரியன்தான்.**

**மாணவனுக்கு உலகைக் கற்பிக்கும் – காட்டும் – ஆசான் ஆசிரியனே.**

**குருகுலக் கல்வி முறை மாறி, வகுப்பறைக் கல்வி முறை நீடித்தது. கொரோனாத் தொற்றின் காரணமாக அந்த முறையும் மறைகின்றது. அல்லது மறைக்கப்படுகின்றது. மெய்நிகர் வழியில் – இணைய முறையில் – கல்விப் போதனைக்கு மெல்ல மாறிக் கொண்டிருக்கின்றோம்.**

**மாணவனும், ஆசிரியனும், நேருக்கு நேர் சந்திக்கும் முறைமை மாறும் சூழல் ஏற்பட்டுள்ளது. இருவரும் திரையில் சந்திக்கும் முறைமையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனாலும் கூட மாணவனில் அடிமனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும் ஆசிரியனின் பிரதான பங்களிப்பு மாறப்போவதில்லை. அது தொடரவே செய்யும்.**

**குருகுலத்திலோ, வகுப்பறையிலோ அல்லது திரை வழிப் போதனையிலோ ஆசிரியனுக்கும் மாணவனுக்கும் இடையில் கற்றல் – கற்பித்தலின்போது ஒரு விசித்திரமான ஊடாட்டம் நிகழ்கின்றது. மானசீகமான சந்திப்பு நிகழ்கின்றது. அகவயமான ஓர் அறிவுசார் உறவு ஏற்படுகின்றது.**

**அறிவுச் சுடராக ஆசிரியனைத் தரிசிக்கின்றான் மாணவன். ஆசிரியரின் எண்ண உலகில், போதனை உலகில், கருத்துலகில், பிரவேசிக்கும் மாணவன் அதனால் ஆகர்ஷிக்கப்படுகின்றான். ஆசிரியரின் அறிவு எனும் அனுபவக்களத்தில் பிரவேசிக்கும் மாணவன் ஆசிரியருடனும் பிற மாணவர்களுடனும் இணைந்து ஓர் அறிவுத் தேடல் பயணத்தை நடத்துகின்றான். ஆசிரியரின் அனுபவ அறிவு மாணவனை பற்றிப் பிடித்துக் கொள்கின்றது.**

**தன் மாணவனுக்கு இப்படிப் பகிர்ந்தளிக்கும் தத்துவ வித்தகம் எல்லா ஆசிரியர்களுக்கும் இலகுவில் வாய்த்து விடுவதில்லை.**

**ஆசிரியர்கள் உரிய பயிற்சி, தேடல், தயாரிப்புகள் மூலம் தம்மை வளர்த்துக் கொண்டால் தான் மாணவர்களை செவ்வையான முறையில் வனையும் வாண்மைத் திறனைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

**ஆசிரியர்களைப் போற்றி ஏத்தும் இந்த ஆசிரிய தினத்தைத் தமது எதிர்காலம் இருண்டு கிடப்பதை அச்சத்தோடு வெளிப்படுத்தும் விதத்தில் ஆசிரியர்களின் சங்கங்கள் தேசிய கறுப்புத் தினமாக அனுஷ்டிக்கும் நிலைமை ஏற்பட்டிருப்பது வேதனைக்குரியது.**

**ஆசிரியனை உரிய தரத்தில் வைத்து – தெய்வத்துக்கு அடுத்த நிலையில் பேணி – போற்றாத சமூகம் உய்ய மாட்டாது என்பதுதான் உண்மை.**

**ஆட்சித் தரப்புக்கு இந்த மெய்யுண்மை புரியுமோ என்னவோ?**

**அதிபர் – ஆசிரியர் சம்பள முரண்பாட்டை நீக்கக் கோரும் ஆசிரியர்களின் கோரிக்கையின் நியாயத்தைப் புரிந்து கொண்டு, அவர்களுக்கு நியாயம் செய்ய அரசு இனியும் காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

# அரசியல் அழுத்தங்கள் காரணமாக உண்மையை மறைக்கும் செயற்பாடு!

### இடம்பெறுகின்றன என கொழும்பு பேராயர் குற்றச்சாட்டு



ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தை பெற்றுக் கொடுக்கும் வழிமுறை இன்று இல்லாமல் போயுள்ளது என கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அரசியல் அழுத்தம், அரசியல் இலாபம் உள்ளிட்ட காரணிகளால் தாக்குதலின் உண்மையை மறைக்கும் நடவடிக்கைகள் மாத்திரம் தற்போது இடம்பெறுகின்றன என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய அவர் -

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொதுப் பிரச்சினை தொடர்பாகவும் அரசாங்கம் அக்கறைகொள்ளவில்லை என்றும் தெரிவித்தார்.

70 வருடகாலமாக ஊழல் நிறைந்த ஆட்சிமுறைமையே தொடர்ந்து என்றும் அந்தநிலைமை இன்றும் நீடிப்பதாகவும் இதனால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை சுட்டிக்காட்டினார்.

குறுகிய நோக்கத்துக்காக மனச்சாட்சிக்கு விரோதமாக செயற்படக்கூடாது எனக் குறிப்பிட்ட கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மக்களுக்காக தொடர்ந்தும் குரல் கொடுப்போம் என்றும் குறிப்பிட்டார்.

# ரிஷாத்துக்கு விளக்கமறியல் நீடிப்பு

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி, அவரை எதிர்வரும் 8ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று (செவ்வாய்க்கிழமை) உத்தரவிட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி, கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் தாக்குதல் நடத்திய தற்கொலை குண்டுதாரிக்கு நிதியுதவி வழங்கினார் எனச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டின் அடிப்படையில் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் வடக்கில் இடம்பெறவில்லையாம்!

### அமைச்சர் ஜோன்சன் கூறுகின்றார்

வடக்கில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளில் வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் வன திணைக்களம் என்பன ஈடுபடவில்லை என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

வன சரணாலயப் பகுதிகளில் தனியார் காணிகள், விவசாய நிலங்கள் மற்றும் பாரம்பரிய விவசாய நிலங்கள் இருந்தால் அவை கையகப்படுத்தப்படா என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாவின் போது வன்னி மாவட்ட உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் முல்லைத்தீவில் நாயாறு மற்றும் நந்திக்கடல் ஆகியன வர்த்தமானியில் 2017 ஆம் ஆண்டிலேயே அறிவிக்கப்பட்டன



என்றும் அவை மட்டுமே அங்கு வனஜீவராசிகள் வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இருப்பினும் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஆராய்வதற்கு அதிகாரிகள் குழுவொன்றை வடக்கிற்கு அனுப்ப நடவடிக்கை எடுப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கிளிநொச்சி, முல்லை மக்களின் நன்னீர் மீன்பிடி வாழ்வியலை மேம்படுத்த டக்ளஸ் நடவடிக்கை



கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடியை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்களின் வாழ்வியலை வலுப்படுத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் குறித்த இரண்டு மாவட்டங்களிலும் உள்ள நன்னீர் நிலைகள் தெரிவு செய்யப்பட்டு மீன் மற்றும் இறால் குஞ்சுகளை இடுகின்ற வேலைத்திட்டம் நக்டா எனப்படும் தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுறுத்தலுக்கு அமைய 3 கோடி 22 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் -

இதுவரை முல்லைத்தீவு மாவட்டத்தில் 18 லட்சத்து 65 ஆயிரம் இறால் குஞ்சுகளும் சுமார் 22 லட்சத்து 81 ஆயிரத்து 314 மீன் குஞ்சுகளும் தெரிவு செய்யப்பட்ட 25 நீர் நிலைகளில் விடப்பட்டுள்ளன.

அதேபோன்று, கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு, அக்கராயன் உட்பட சுமார் 7 குளங்களிலும் பருவகால நீர்நிலைகளிலுமாக 12 லட்சம் இறால் குஞ்சுகளும் 13 லட்சத்து 89 ஆயிரத்து 570 மீன் குஞ்சுகளும் விடப்பட்டுள்ளன.

நக்டா நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டின் ஊடாக சுமார் 40 லட்சம் இறால் குஞ்சுகள் மற்றும் சுமார் 58 லட்சம் மீன் குஞ்சுகளை முல்லைத்தீவு மாவட்ட நன்னீர் நிலைகளிலும் 30 லட்சம் இறால் குஞ்சுகளையும் 50 லட்சம் மீன் குஞ்சுகளையும் கிளிநொச்சி மாவட்ட நன்னீர் நிலைகளில் இந்த வருடம் விடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எஞ்சிய இறால் மற்றும் மீன் குஞ்சுகளை எதிர்வரும் வாரங்களில் தெரிவு செய்யப்பட்ட நீர்நிலைகளில் விடுவதற்கான நடவடிக்கைகளை நக்டா நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

இதன்மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் 1,000 குடும்பங்களும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 700 குடும்பங்களும் நன்மையடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

**எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு**

**அங்கம் - 97**

**ந.வித்தியாதரன்**

ஊடக ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம் ஐயா பற்றிய இந்த நினைவுப்பதிவு கடந்த ஜூலை 2 ஆம் திகதி அவரது நூறாவது பிறந்த தினத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இன்னும் மூன்று இதழ்களில் நூறாவது அத்தியாயத்தை அது எட்டும்போது அதனை முடிப்பதாக உத்தேசம்.

அவரைப் பற்றி எழுதத் தொடங்கிய காலத்திலிருந்து தொடர்ந்து புதிது புதிதாக பல விடயங்கள் - அவருடைய ஆளுமை பற்றிய தகவல்கள் - அவருடைய ஆக்கங்கள் பற்றிய விவரங்கள் - கிடைத்து வருகின்றன. அவை நிச்சயமாக வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டியவை. ஆனால் இந்தத் தொடர் நீண்டு விடும் என்பதால் அடுத்த மூன்று இதழ்களுடன் இதை நிறுத்த விரும்புகிறேன். எனினும் சிவநாயகம் ஐயாவினுடைய ஊடகப் பணி பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளக் கூடிய பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஏனைய தரப்பினருக்கும் என்னிடம் உள்ள மற்றைய தகவல்களையும் வழங்கி உதவத் தயாராக இருக்கிறேன்.

இன்று அவருடைய தினபதி, சிந்தாமணி பத்திரிகை பிரசுரம் ஆரம்பமானது போது தினபதியில் அவர் எழுதிய முதல் ஆசிரியர் தலையங்கத்தை இங்கு பிரசுரிக்கிறேன். சரியாக 55 ஆண்டுகளுக்கு முன்னர் 1966ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி இந்த ஆசிரியர் தலையங்கம் வெளியானது. அதன் விவரம் வருமாறு:-

**அர்ப்பணம்**

உலகெலாம் நிகழும் உண்மை செய்திகளையும் உள்ளூர்ச் செய்திகளையும் தாங்கி இந்த நாட்டின் தேசிய தினசரிகளில் ஒன்றாக இன்று முதல் வெளிவருகின்றது தினபதி.

தினபதி மக்கள் தினசரி. தினபதி சுயாதீனமான கருத்துடைய ஒரு பத்திரிகை. எந்த அரசியல் கட்சியுடனும் இதற்குத் தொடர்பு கிடையாது. எந்த அரசியல் கட்சியினுடைய தயவையும் சலுகையையும் தினபதி நாடி நிற்கவில்லை. எந்த ஓர் அரசியல் கட்சியும் தன்னை ஓர் ஆயுதமாக உபயோகிப்பதற்கு தினபதி ஒரு போதும் அனுமதிக்காது.

மக்கள் அறிந்து கொள்ள வேண்டியவை எவையோ மக்களுக்கு நன்மை பயப்பன எவையோ, அவற்றை அவ்வப்போது எடுத்துக் கூறுவதுதான் தினபதியின் நாளாந்த பணியாகும். அதனால் செய்திகளையும் கருத்துக்களையும் தினபதி உடனுக்குடன் வாசகர்களுடன் பரிமாறிக் கொள்ளும். தினபதியில் வெளியாகும் ஒவ்வொரு வாக்கியமும் சுயாதீனமான மனோபாவத்துடன்தான் வெளியிடப்படும். ஏனென்றால் பொதுமக்களைப் பொறுத்தவரையில் தினபதிக்கு ஒரு கடமையுண்டு. பொது மக்களுக்கு நன்மை விளைவிக்கும் ஆட்சியைப் போற்றுவதும், இன்னல் விளைவிக்கும் எந்த நடவடிக்கையையும் எதிர்ப்பதும் தினபதியின் கடமையின்பாற்பட்டதாகும். ஒவ்வொரு மனிதனும் தனது அத்தியாவசியத் தேவைகள் எல்லாம் இடர்பாடின்றிக் கிடைக்க பெற்றவனாகவும், அடிப்படை மனித உரிமைகள் அனைத்தையும் இந்த நாட்டில் பெற்று மனமகிழ்ச்சியோடு வாழ்பவனாகவும் விளங்க வேண்டும் என்றும் தினபதி கருதுகின்றது. இதற்கு நமக்கு கிடைத்துள்ள அரசியல் விடுதலை, பொருளாதார விடுதலையாக பரிணமிக்க வேண்டியது அவசியமாகும்.



தினபதி நிறுவனம் மூடப்படும் தறுவாயில் - 1990 இல் - ஆண்டில் வெளியான இதழ் ஒன்று.

பொருளாதார விடுதலை ஏற்பட்டு, நாடு சுபீட்சமடைவதற்கு ஜாதி, மத பேதங்களையும் இன, மொழி வேற்றுமைகளையும் மறந்தவர்களாக அனைவரும் ஒன்று சேர்ந்து நாட்டின் வளத்தையும் அபிவிருத்தியையும் பெருக்க வேண்டும்.


வறுமை நீங்கித் தேசிய அபிவிருத்தி ஏற்பட்டாலொழிய, நாட்டிலோ வீட்டிலோ சமாதானம் நிலவ முடியாது. எனவே தேசிய சுபீட்சமும் பொருளாதார விடுதலையும் சர்வஜன சௌஜன்யத்தின் மூலம் உருவாகும் சமாதானமுமே தினபதியின் திரித்துவக் குறிக்கோளாகும்.

ஒரு நாட்டின் செழிப்புக்கும் வளர்ச்சிக்கும் பொருள் வளம் மட்டும் போதாது. நாட்டு மக்கள் கலை உணர்ச்சியும், கலாசார மறுமலர்ச்சியும் பெற்றவர்களாக விளங்க வேண்டும். அவர்களுடைய உள்ளத்தில் ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற பரந்த அடிப்படையிலான தெய்வ நம்பிக்கையும் அவரவர் சொந்த வாழ்வில் ஆத்மீக ஈடுபாடும் இன்றியமையாதன. அத்தோடு சமுதாய ரீதியில் எம்மதமும் சம்மதம் என்ற சுத்த சமரச சன்மார்க்க நெறியிலே நிலைகொண்ட ஆன்மநேய ஒருமைப்பாடும் தேவை. இந்த இலட்சியங்களை அடைவதற்காக இலங்கையின் மக்கள் சமுதாயத்துடன் இரண்டறக் கலந்து உழைப்பதற்கு தினபதி தன்னை இன்று முதல் அர்ப்பணித்து கொள்கின்றது.

இலங்கையின் பண்டைய கலைகளான இயல், இசை, நாடகம், நாட்டியம், நாட்டுப் பாடல், நாட்டுக்கூத்து முதலியவற்றுக்கும் உள்நாட்டு விளையாட்டுக்களுக்கும் புத்துயிரளித்து அவை மேலோங்கச் செய்வதில் தினபதி முன்னின்று உழைக்கும். அத்தோடு இந்நாட்டிலுள்ள இந்து, பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய நால்வகை மதங்களும் சிறப்புற வேண்டிய சேவைகளை அவ்வப்போது நடுநிலை நின்று ஆற்றிவரும். இவ்வண்ணமாக ஒரு பரந்த அடிப்படையில் பணிபுரிய தன்னை அர்ப்பணித்து கொள்வதனாலேயே தினபதி ஒரு தனிவழி வகுத்து என்றென்றும் ஒரு மக்கள் தினசரியாக திகழப் போகிறதென்பது திண்ணம்.

தினபதி என்றால் தினத்தின் அதிபதி என்று பொருள். தினத்தின் அதிபதி சூரியன். சூரியன் பூமண்டலத்தின் புனித நாயகன்..! சுழலும் காலச்சக்கரத்தின் அச்சாணி. சூரியனைப் போல தினபதியும் இருள் அகற்றி, அறிவொளி வீசி, இயங்கும் மக்கள் சமுதாயத்தின் அச்சாணியாக விளங்கும் என்று உறுதி கூறுகின்றோம்.

-மேற்கண்டவாறு இலங்கைத் தமிழ்ப் பத்திரிகையுலக ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகத்தை ஆசிரியராகக் கொண்டு 1966 ஆம் ஆண்டு முதல் எம்.டி.குணசேனாவின் 'இன்டிபென்டன் நியூஸ்பேப்பர்ஸ்' ஸ்தாபனத்திலிருந்து வெளிவரத் தொடங்கிய தினபதி நாளிதழில் 'அர்ப்பணம்' என்ற தலைப்பில் எஸ்.டி. எஸ்.தினபதிக்காக எழுதிய முதலாவது ஆசிரியர் தலையங்கம் அவரது நினைவாக இன்று சமர்ப்பணமாகின்றது.



(வளரும்....)



தினபதி முதல் இதழ் முன்பக்கம்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 152

**396. அவரவர்களுக்கு அளிக்கப்பட்ட பங்குகள் என்ன?**

லலித் அத்துலத்முதலி, பாதுகாப்பு அமைச்சர். ஜூலை 83 வரும் நேரத்தில் தனது திட்டத்தால் விடுதலைக் குழுக்களுக்கும் கூட்டணியினருக்கும் பிளவுகள் ஏற்பட்டு இருவருமே அந்நியப்பட்டு விடுவார்கள். ஆகவே பாரிய தாக்குதல் ஒன்றை ஏற்படுத்தி விடுதலைக் குழுக்களையும் அவர்களுக்கு ஆதரவாக இருக்கக் கூடிய இளைஞர்களையும், "அள்ளிக்கொண்டு" வந்து கொழும்புச் சிறைகளில் வைத்து, தமிழீழம் நிறுவும் முயற்சிகள் தோல்வி கண்டபின் படிப்படியாக விடலாம் என கணக்கெடுக்கப்பட்டது.

அதற்காக "கஜபாகு" என்ற தனிப் படைப் பகுதி இதனைக் கையாள அமைக்கப்பட்டது. இராணுவத்துக்கும் பொலிஸுக்கும், சிங்கள மக்கள் தங்களைப் பாதுகாக்க நடவடிக்கைகள் ஏதும் எடுத்தால் அவர்கள் நியாயமாகவே அவற்றைச் செய்கிறார்கள் என ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் கீதையின் தர்மமும் அவர்களுக்கு ஓதப்பட்டது.

காமினி திஸநாயக்கா, மகாவலி திட்ட அமைச்சர். அவர், மகாவலி உத்தியோகத்தர்கள் மூலமாக தமிழ்ப் பகுதிகளில் குடியேற்றப்பட்ட தென்னிலங்கையரைக்



சிறில் மத்தியூ

கையாளும் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டது. தமிழீழம் அமைக்கும் நிலை வந்தால், அவர்களது அயல்களில் வாழும் தமிழ் மக்கள் அடித்து விரட்டப்பட வேண்டும், விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு உஷாராக இருக்கவேண்டும் என்ற பணிப்புரைகள் தரப்பட்டன.

இடது சாரிக் கட்சிகளின் தலைமையிலும், இடது சாரி அமைப்புக்களின் அனுசரணையிலும்தான் ஶ்ரீலங்காவின் தொழிற்சங்கங்கள் இருந்தமையும் வளர்ந்தமையும் வரலாறு. அவற்றின் ஆதிக்கங்களை முறியடிப்பதற்காக யூ.என்.பியின் இரண்டு தொழிற்சங்கங்களை ஜே.ஆர். ஆரம்பித்தார். அவை, தொழிற்சங்கங்களின் போராட்டங்களை பலவீனமாக்கவும் உடைப்பதற்காகவும்தான். அதில் ஒன்று ஜாதிக சேவா சங்கம். மற்றது லங்கா ஜாதிக தோட்ட தொழிலாளர் அமைப்பு. இவை இரண்டையும் சிறில் மத்தியூவின்



லலித் அத்துலத் முதலி

கீழ் கொண்டு வந்து அவற்றைப் பலப்படுத்துவதென்ற போர்வையில் தமிழ் மக்களுக்கெதிராக பயன்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தத் தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள், நிர்வாகிகள் யாவருமே யூ.என்.பி. அங்கத்தினர்கள். அவர்களைச் சுற்றி தொழிற்சங்கங்களுக்கு எதிராக ஏவப்பட்ட காடையர்கள் யாவரும் கூப்பிடும் நேரத்தில் வருவதற்குத் தயாராக இருந்தார்கள்.

யூ.என்.பி. தொழிற்சங்கங்களை விரிவுபடுத்த வேண்டும் என்பதற்காக அவை தமிழர் செறிந்து வாழ்ந்த பகுதிகளிலும் கிளைகள் நிறுவப்பட்டு அங்கங்கே வாழும் தமிழர்கள், அவர்களது வணிக நிலையங்களின் விவரங்கள் யாவும் சிறில் மத்தியூவின் எழுதாத உத்தரவின் பேரில் உள்ளூராட்சி, நகராட்சி சபைகளினால் அவர்களின் சங்க நிர்வாகிகளுக்கு கொடுக்கப்பட்டன. அவை காடையர்களுக்குக் கைமாறின.

பல்கலைக்கழக, உயர்தரவகுப்பு மாணவரிடையே யூ.என்.பிக்கு பலத்த ஆதரவோ சங்கங்களோ இருக்கவில்லை. அங்கு அயல்க்கிராமங்களில் இருந்த அமைப்பாளர்கள் கிரமமாகச் சென்று குறிப்பிட்ட மாணவர்களை அணுகி, சிங்களத்துக்கும் பௌத்தத்துக்கும் வரப்போகின்ற ஆபத்தை எடுத்துச் சொல்லி, அவர்களுக்கு இதைத் தடுக்கும் கடமைகள் உண்டு என அறிவுறுத்தி எதிரித்தன்மை வளர்க்கப்பட்டது.

அப்படியாக எல்லாத் தளத்திலும், அமிர்தலிங்கத்தின் அரசியல் அல்ல, விடுதலைப் போராளிகள் வன்முறை அல்ல, தமிழீழம் என்பது ஒரு தேசிய அரசியல் கருத்தியல் கட்டமைப்பு அது வளர விடப்படுமானால் அது சிங்கள பௌத்தத்தின் இருப்பைக் கேள்விக்குறியாக்கும். ஆகவே அதற்கு உரம் கொடுக்கும் எல்லாமே அழிக்கப்பட வேண்டும். அது நியாயமானது என்பது ஆழமாக ஊன்றப்பட்டது.

(வளரும்......)



காமினி திஸநாயக்கா



காமினியும் ஜே.ஆரும்

# ஆரிய குளத்தில் வைக்கப்படும் பௌத்த சின்னம்; மேயர் வேண்டுமென்றே பொய்யுரைத்துள்ளார்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் கிருபாகரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆளுகையில் உள்ள ஆரியகுளத்தின் உள்ளே வைக்க முயற்சிக்கப்படும் பௌத்த சின்னம் தொடர்பில் மாநகர முதல்வர் வேண்டுமேன்றே சபைக்கு பொய்யுரைத்து தவறாக வழிநடாத்தி உள்ளார் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் வை.கிருபாகரன் தெரிவித்தார்.

ஆரியகுளத்தில் இந்து பௌத்த நல்லிணக்க சின்னம் என்னும் பெயரில் ஒரு பௌத்த சின்னம் அமைக்க முயற்சிக்கப்படுகின்றமை தொடர்பில் கொக்குவிலில் அமைந்துள்ள முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னணியின் மூன்று மாநகர சபை உறுப்பினர்கள் இணைந்து நடத்திய இந்தச் செய்தியாளர் சந்திப்பில் உறுப்பினர் வை.கிருபாகரன் இது தொடர்பில் மேலும் விவரம் தெரிவிக்கையில் -

ஆரியகுளத்தைப் புனரமைக்க 2021 ஆண்டு பெப்ரவரி மாத மாதாந்த கூட்டத்தில் சபை ஏகமனதான ஆதரவை வழங்கும்போது சபை நியமங்களுக்கு அமைய அதனை மேற்கொள்ளுமாறே அனுமதி வழங்கியது. பின்னர் 6ஆம் மாதம் எஸ்.டி.பி. திட்டத்தின்போது பரிந்துரைத்த நியமங்கள் மாறாது மேற்கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இவை எவற்றையும் பின்பற்றப்படாமலே முதல்வர் தற்போது பணியை மேற்கொள்கின்றார்.

இதேநேரம் குளத்தின் நடுவே அமையவுள்ள இந்து பௌத்த சின்னம் தொடர்பில் 2021-09-28 அன்று ஓர் உறுப்பின் கேள்வி எழுப்பி தேரரிடம் இருந்து ஏதும் கடிதம் வந்ததா என கேள்வி எழுப்பிய சமயம் இல்லை அது பொய், பொய் என முதல்வர் பதிலளித்தார் அதாவது முதல்வரே பொய் உரைத்தார்.

இதேநேரம் ஆணையாளர் சபைக்கு சமர்ப்பிக்குமாறு முதல்வர் மற்றும் செயலாளருக்கு எழுத்தில் சமர்ப்பித்துள்ளார். இருந்தபோதும் சபைக்கு சமர்ப்பிக்காது கோவையில் இட முதல்வரே பணித்துள்ளார். இருந்தபோதும் இதனையறிந்த நிலையிலேயே உறுப்பினர் ஒருவரும் கேள்வி எழுப்பினார். இவை அனைத்தையும் மறைத்துவிட்டு தற்போது அதனை பிரசுரித்து பகிரங்கப்படுத்திய செய்தியாளரை மிரட்டும் வகையில் செயற்பட முனைகின்றனர். இதேநேரம் விகாராதிபதியிடம் ஒன்றைக் கேட்க விரும்புகின்றோம். அம்பாறை, திருகோணமலை ஏன் முல்லைத்தீவில் சைவ ஆலயங்கள் மீது பௌத்த திணிப்பு அதேபோன்று இராணுவத்தினரின் உதவியுடன் இடம்பெறும் நடவடிக்கைகளாக இருக்கலாம் இவ்வாறான செயல்களின்போது இந்த பௌத்த தேரர் எங்கே போனார்? அப்போது ஏன் இந்த நல்லிணக்கம் தொடர்பில் குரல் எழுப்பவில்லை. இதே போன்று மாநகர முதல்வர் இந்த மண்டபம் தொடர்பில் வெளிப்படைத் தன்மை இன்றி இரகசியமாக செயற்பட்டதாகவே கருத முடிகின்றது. இவ்வாறெல்லாம் சபையையும், சபை உறுப்பினர்களையும், தமிழ் மக்களையும் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி முதல்வர் முட்டாளாக்க முயல்வதற்கு எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். - என்றார்.

# மாலைதீவுக் கடல் பகுதியில் 85 இலங்கையர்கள் கைது!

## அமெரிக்கத் தளம் அருகே

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்.05

இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படும் 85 பேர் மாலைதீவு அருகே - அமெரிக்கப் படைத்தளம் அமைந்துள்ள டிக்கோ கார்ஸியா தீவுக்கு அருகில் நேற்றுக் காலை மாலைதீவுத் தரப்பினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் இருந்து வெளியேறி நீண்ட நாள்களாக இந்தியாவின் தமிழ்நாட்டிற்குச் தப்பிச் சென்றவர்கள் அங்கிருந்து, கேரளா வழியாக நீண்டநாள் படகு ஒன்றின் உதவியுடன் பிறநாடு ஒன்றில் தஞ்சம் கோரும் வகையில் இப்படிச் சென்றிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இவ்வாறு இலங்கையர்கள் பயணித்த படகு இந்தியாவிற்குச் சொந்தமானது என நம்பப்படும் அதே நேரம், இதில் பயணித்தவர்கள் எந்த நாட்டை இலக்கு வைத்துப் பயணித்தார்கள் என்பதும் இலங்கையின் எந்த இடத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் இதுவரை தெரியவரவில்லை.

மண்டபம், ஈரோடு, சென்னை, போரூர் போன்ற பகுதிகளிலுள்ள ஈழத்தமிழர் அகதி முகாம்களில் இருந்த 56 பேரை கடந்த செப்ரெம்பர் 26ஆம் திகதி முதல் காணவில்லை என்று கூறப்படுகிறது. இவர்களும் இலங்கையிலிருந்து அண்மையில் வந்து சேர்ந்திருக்கலாம் எனக் கருதப்படும் ஒரு பகுதியினருமாக சட்டவிரோதமாக கனடாவுக்குச் செல்ல முயன்ற சமயம் இப்படிச் சிக்கியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.



# லயன்ஸ் கழகத்தினால் புற்றுநோய் விழிப்புணர்வு




இருபாலை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகத்தால் வலிவடக்கு, சுன்னாகம், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில்குழந்தைகள் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்டது.

இருபாலை லயன்ஸ் கழகத் தலைவர் இரா.ஜெயக்குமாரின் ஏற்பாட்டில் அவரது மகள் ஜெயக்குமார் ஜெனிஸ்ரினாவின் இரண்டாவது பிறந்த நாளை முன்னிட்டு இந்த விழிப்புணர்வு நடத்தப்பட்டது.

இந்த விழிப்புணர்வு நிகழ்வில் கிராம உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், புற்று நோய் வைத்தியசாலைகளைச் சேர்ந்தவர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஊடாக இந்த நிகழ்வு நடைபெற்றது.

# வீதியோர நிழல்தரும் மரங்கள் சங்கத்தானையில் தீ வைப்பு



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி - சங்கத்தானைப் பகுதியில் ஏ9 வீதியோரம் நாட்டப்பட்டிருந்த நிழல் மரங்கள் இனந்தெரியாதோரால் தீ வைத்து அழிக்கப்பட்டுள்ளன.

பசுமை நிழல்கள் அமைப்பினரால் வைத்து பராமரிக்கப்பட்டு வந்த வீதி ஓர நிழல் மரங்களே இவ்வாறு தீ வைத்து நாசமாக்கப்பட்டுள்ளன. மேற்படி அமைப்பினர் சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதியோரங்களில் மரங்களை நாட்டி பராமரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கும் பாடசாலைகளை திறப்பதற்கும் தொடர்பில்லை

## ஹேமந்த ஹேரத் இப்படிக் கூறுகின்றார்

பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கும் சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கும் நேரடி தொடர்பு இல்லை என சுகாதார சேவைகள் துணை பணிப்பாளர் ஜெனரல் வைத்தியர் ஹேமந்த ஹேரத் கூறினார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர் -

பாடசாலைகளை மீண்டும் திறப்பது மற்றும் சிறுவர்களுக்குத் தடுப்பூசி செலுத்துவது இரண்டும் வெவ்வேறு அம்சங்கள் என்று நிபுணர் குழு திட்டவட்டமாகக் கோடிட்டுக் காட்டியதாக அவர் கூறினார்.

பாடசாலைகளை மீண்டும் திறக்கும்போது நாட்டில் தினசரி கொரோனா நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கை, பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தாமதமான தேர்வுகள் எதிர்காலத்தில் எவ்வாறு நடத்தப்படும் என்பதற்கான வாய்ப்புகள் போன்ற காரணிகளையே கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் விளக்கினார்.

இருப்பினும் சிறுவர்களுக்குத் தடுப்பூசி செலுத்தும்போது, விஞ்ஞானத் தரவு மற்றும் நிபுணர் குழு முன் வைக்கும் பரிந்துரைகளின்படி தனித்தனியாக முடிவு செய்யப்படும் என்




றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவை இரண்டும் எதிர்காலத்தில் சரியான நேரத்தில் நடக்கும் என்று கூறிய அவர், ஆனால் இரண்டும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும் என்று அவசியமில்லை என மீண்டும் வலியுறுத்தினார்.

# உலர்ந்த மஞ்சள் புத்தளத்தில் மீட்பு



புத்தளம், நுரைச்சோலை கடற்கரையில் இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையில் சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட சுமார் 1,064 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் மீட்கப்பட்டுள்ளது.

வடமேற்கு கடற்படை கட்டளையில் தம்பபண்ணி கடற்படையினர் குறித்த பகுதியில் கடந்த திங்கட்கிழமை மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே உலர்ந்த மஞ்சள் மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்கரையோரப்பகுதியில் உள்ள மீன்வாடியொன்றை கடற்படையினர் சோதனை செய்தனர். இதன்போது, சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 1,064 கிலோ கிராம நிறையுடைய 32 மூடைகளில் பொதி செய்யப்பட்ட உலர்ந்த மஞ்சள் குறித்த மீன்வாடிக்குள் காணப்பட்டதாகக் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து 1,064 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் மூடைகளைக் கைப்பற்றிய கடற்படையினர், சந்தேகத்தின் பேரில் ஒருவரையும் கைது செய்தனர். நுரைச்சோலை நரக்களி பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட உலர்ந்த மஞ்சள், உள்ளூர் பகுதிகளுக்கு விற்பனைக்காக கொண்டு செல்லும் நோக்கில் மேற்படி மீன்வாடிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனத் தாம் சந்தேகிப்பதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட உலர்ந்த மஞ்சள் சுகாதார வழிகாட்டுதலுக்கு அமைய கொரோனாத் தொற்று நீக்கி தெளிக்கப்பட்டுள்ளதுடன், உலர்ந்த மஞ்சள் மூடைகளும், சந்தேக நபரும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நுரைச்சோலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனக் கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

# பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு முன்னர் ஆசிரியரின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு வேண்டும்

## ருவான் விஜேவர்தன வலியுறுத்து

பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு முன்னர் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பளம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் குரல்களை மௌனமாக்குவதற்குப் பதிலாக அவர்களுடன் கலந்துரையாட வேண்டும் என அக்கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க.தலைமையிலான அரசாங்கம் ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் அவர்களின் மாதச் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கவும் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுத்தோம் என அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், தற்போதைய அரசாங்கத்தின் தோல்வியடைந்த கொள்கைகளால் தற்போது, கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதாரம் சரிந்து விட்டதாக அவர் கூறினார்.

இம்மாதம் பாடசாலைகளை மீண்டும் திறக்கத் தீர்மானித்துள்ள நிலையில், அரசாங்கம் தொழிற்சங்கத்துடன் கலந்துரையாடி அவர்களின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.



# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு 231 ஆவது படையினரின் முயற்சியால் உதவி



மட்டக்களப்பு 231ஆவது இராணுவ படைப்பிரிவினர் மூன்றாவது தடவையாகவும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரண தொகுதியொன்றைக் கடந்த திங்கட்கிழமை வழங்கி வைத்துள்ளனர்.

இலங்கை காலாட் இராணுவ தலைமையகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அமெரிக்காவில் வாழ்கின்ற ஒன்றிணைந்த இலங்கை உறவுகளால் வழங்கப்பட்ட மருத்துவ உபகரணம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வழங்கி வைக்கப்பட்டது.

மூன்று லட்சம் ரூபா பெறுமதியான ஒட்சிசன் செறிவாக்கி மற்றும் கொவிட் 19 தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுத்தும் மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட மருத்துவ உபகரண தொகுதியை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி கலாரஞ்சனி கணேசலிங்கத்திடம் மட்டக்களப்பு கல்லடியிலுள்ள 231ஆவது இராணுவ படைப் பிரிவின் கட்டளை அதிகாரியான பிரிகேடியர் கேணல் டிலூப பண்டார தலைமையில் கையளித்துள்ளனர்.

இந்நிகழ்வில் கல்லடி 231ஆவது இராணுவ படையணியின் இராணுவ அதிகாரிகள் மற்றும் வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இலங்கை காலாட் இராணுவ தலைமையகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அமெரிக்காவில் வாழ்கின்ற ஒன்றிணைந்த இலங்கை உறவுகளால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# மிகப்பெரிய கொள்கலன் கப்பல் கொழும்பை வந்தடைந்துள்ளது

உலகின் மிகப்பெரிய கொள்கலன் கப்பலான எவர் ஏஸ் என்ற கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. அந்தவகையில் எவர் ஏஸ் என்ற கப்பல் நேற்று (செவ்வாய்க்கிழமை) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

எவர் ஏஸ் என்ற கப்பல் 400 மீற்றர் நீளமும், 62 மீற்றர் அகலமும் கொண்டதுடன், 23 ஆயிரத்து 992 கொள்கலன்களைக் கொண்டுசெல்லும் திறன்கொண்டது.

இந்தக் கப்பல் எவர் கிறீன் கப்பல் நிறுவனத்துக்குச் சொந்தமானதுடன் கடந்த ஜூலை மாதம் கொள்கலன் கையாளும் நடவடிக்கைக்கு இணைக்கப்பட்டது.

கடந்த மாதம் நெதர்லாந்தின் ரோடர்டேம் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட குறித்த கப்பல் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இதேவேளை, தெற்காசியாவில் இவ்வாறு மிகப் பெரிய கப்பல் நங்கூரமிடக்கூடிய ஒரேயொரு துறைமுகம் கொழும்பு துறைமுகம் என்பது சிறப்பம்சமாகும். இந்நிலையில், இது போன்ற பாரிய கொள்கலன் கப்பல்கள் நங்கூரமிடக்கூடிய வசதியுடைய துறைமுகங்கள் உலகிலேயே 24 உள்ளன.

# கொவிட் போலித் தடுப்பூசி அட்டை நாட்டில்பல இடங்களில் பயன்பாடு

நாடு முழுவதும் போலியான முறையில் தயாரிக்கப்பட்ட கொவிட் தடுப்பூசி அட்டைகளை பலர் பயன்படுத்துகின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

அவ்வாறு பயன்படுத்தப்படும் அட்டை செல்லுப்படியாகுமா என்பது தொடர்பில் ஆராய்வதற்கு கொவிட் தடுப்பு செயலணி தீர்மானித்துள்ளது.

பிரதேச செயலக அலுவலகம், கிராம சேவர் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மட்டத்தில் இது தொடர்பில் ஆராயத் திட்டமிடப்பட்டுள்ளது. நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் தலைமையில் கொவிட் தடுப்பு செயலணி கடந்த முதலாம் திகதி கூடியது.

இந்தக் கூட்டத்தின் போது, பொது இடங்களுக்கு செல்லும் போது தடுப்பூசி அட்டை பயன்படுத்துவதைக் கட்டாயமாக்குவதற்கான தீர்மானத்தை மேலும் தாமதமாக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி தொடர்பில் சரியான தரவுகளைத் தயாரிப்பதற்கு மேலும் போதுமான காலப்பகுதி அவசியமாக உள்ளதென சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியமையே இதற்குக் காரணமாகும்.

# அனர்த்த முகாமைத்துவ குழுக் கூட்டம் திருமலை செயலகத்தில் நடைபெற்றது

திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக் கூட்டம் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரால தலைமையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்றது.

தற்போது நிலவக்கூடிய மொன்சூன் பருவக்காற்று நிலைமை காரணமாக மாவட்டத்தில் அனர்த்தங்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளவேண்டிய முன் ஆயத்த நடவடிக்கைகள் பற்றி இந்தக் கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் பிரதேச செயலாளர் தலைமையில் அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் பிரதேச செயலக ரீதியாக உத்தியோகத்தர்களும் ஏற்படக்கூடிய அனர்த்தங்களில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான முன்னேற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

மக்கள் இது தொடர்பில் கூடிய அவதானத்துடன் செயற்படல் மிக முக்கியமானது. மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி அதிகார சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் காணப்படுகின்ற வடிகான்களைத் துப்பரவுபடுத்துவது மிக இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. சில பிரதேசங்களில் வடிகான்கள் மூடப்பட்டுக் காணப்படுவதன் காரணமாக மழையால் வெள்ளப்பெருக்கு அதிகமாக ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் இருக்கின்றது.

எனவே உள்ளூர் அதிகார சபை நிறுவனங்கள் வடிகான்களைத் துப்புரவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் ஏனைய நிறுவனங்களும் தங்களுடைய ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்று இதன்போது அரசாங்க அதிபர் உரிய அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

மாவட்டத்தில் இயற்கை அனர்த்தம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் மக்களைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை முப்படை மற்றும் பொலிஸ் மற்றும் ஏனைய நிறுவனங்களை இணைத்துக்கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என இதன்போது அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பி.ஆர்.ஜயரத்ன, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் கே.சுகுணதாஸ், பிரதேச செயலாளர்கள், முப்படை, பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் ஏனைய திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# இரசாயன உரப் பயன்பாட்டுக்கு தடை விதித்துள்ளதால் தேயிலை பொருளாதாரம் பாதிக்கப்படக்கூடும் - நவீன்

உரிய மாற்று ஏற்பாடுகளின்றி இரசாயன உரப் பயன்பாட்டுக்கு அரசாங்கம் தடை விதித்துள்ளதால் தேயிலை பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படக்கூடும் என ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் பெருந்தோட்டத்துறை அமைச்சருமான நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

நுவரெலியாவில் கடந்த திங்கட்கிழமை மாலை ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

சீனாவிலிருந்து சேதனப் பசளை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் முற்பட்டது. எனினும், கிடைக்கப்பெற்ற மாதிரிகளில் பக்றீரியா இருப்பது உறுதிசெய்யப்பட்டது. இதனை வெளிப்படையாக அறிவித்த விவசாயத் திணைக்கள அதிகாரிகளுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உண்மையை மறைப்பதற்கு பல அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கலாம். குறித்த சேதனப் பசளைக்கு அனுமதி வழங்கியிருந்தால் அதனால் மண்ணுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கும்.

தேயிலை உற்பத்திக்கு இரசாயன உரம் அவசியம். எனினும், நிபுணர்களின் ஆலோசனை மற்றும் மாற்று ஏற்பாடுகளின்றி எடுத்த எடுப்பிலேயே உரப் பயன்பாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டது. இதனால் உரிய விளைச்சல் கிடைக்கவில்லை. தேயிலை பொருளாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் தாக்கம் இன்றும் 5 ஆண்டுகளில் தெரியவரும்.

அதேவேளை, தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தால் பரிந்துரைக்கப்படும் உரத்தை மட்டும் பயன்படுத்துமாறு சிறுதேயிலை தோட்ட உரிமையாளர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையின் எதிர்கால கல்வி அபிவிருத்தியை கொண்ட ஆசிரிய வாண்மைப் பல்கலைக்கழகம்

கலாநிதி பா. தனபாலன்

21ஆம் நூற்றாண்டின் கல்விச் சவால்களுக்கு முகம் கொடுக்கும் பட்டதாரி ஆசிரியர்களை இலங்கையில் உருவாக்குவதற்கு 'இலங்கை ஆசிரிய கல்விப்பல் கலைக்கழகம் ஒன்றை விரைவாகத் ஸ்தாபிக்கும் முன் மொழிவு வெளியிடப்பட்டுள்ளது. அம் முன்மொழிவில் திருத்தங்களை மேற்கொண்டு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழ் நிறுவப்படும் சுதந்திரமான தன் னாதிக்கமுள்ள அமைப்பின் ஊடாக 19 தேசிய கல்வி யியற் கல்லூரிகள், ஆசிரிய கலாசாலைகள், ஆசிரிய வாண்மை நிலையங்கள் இணைத்து இலங்கை ஆசிரி யர் கல்வித் தொழில் வாண்மைப் பல்கலைக்கழகம் விரைவாக உருவாக்கப்பட வேண்டும் என அரசாங் கத்துக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இலங்கை ஆசிரிய கல்வியியலாளர்கள் சேவை அதி காரிகள் தொழிற்சங்கம் வலுவான போராட்டங்களை நடத்தி வருகின்றது.

முன் சேவை ஆசிரியர் கல்விப்பயிற்சியே உலகம் தழுவிய அங்கீகாரம் என்பதற்கு இணங்க இலங்கையில் 1986 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க சட்ட மூலம் தேசிய கல்வியியற் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. இரண்டு வருட வதிவிடப்பயிற்சி, ஒரு வருட உள்ளகப்பயிற்சியுடன் மிகச் சிறந்த கற்பித்தில் தேசிய டிப்ளோமா பாடநெறி வடிவமைக்கப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்டது. தேசிய கல்வி நிறுவகம் கலைத்திட்ட முகாமைத்துவத்தையும் கல்வியமைச்சு நிர்வாக செயலாற்றுகைகளை சிறப்பாக மேற்கொண்டன. இலங்கை ஆசிரியர் கல்வி வரலாற்றில் இப்பயிற்சி நெறி புரட்சிகரமான இளம் நல்லாசிரியர்களைப் பெரு மளவு உருவாக்கியது. எல்லோருடைய வரவேற்பையும் பெற்றது.

கற்றல் – கற்பித்தல் முறைகளைப் பிரயோகிப்பதி லும், பாடசாலைக் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்து வதிலும் இப்பயிற்சி நெறியை பூர்த்தி செய்த இளம் ஆசிரியர்கள் மிகச் சிறப்பாக செயலாற்றி எல்லோரது பாராட்டுக்களையும் பெற்றனர். தொடர்ந்து கற்று பரீட்சைத் திணைக்களம், தேசிய நிறுவகம், தேசிய கல் வியியற் கல்லூரிகள், கல்வியமைச்சின் அதிகாரிகளாக பெரும்பாலானோர் உருவானார்கள், ஆனாலும் கடந்த 35 வருடங்களுக்கு மேலாகின்றது தேசிய கல்வியியற் கல்லூரிகள் உருவாகி! எனவே கலைத்திட்டத்தில் முழு மையான சீர்திருத்தத்தை மேற்கொண்டு, ஒரு வரு டத்தை அதிகரித்து ஓர் ஆசிரிய தொழில் வாண்மைப் பல்கலைக்கழகமாக உருமாற்றப்பட வேண்டும் என்ற சிந்தனைகள் செயல் வடிவம் பெற்றன. பொதுவான இது எமது உள்ளூர் பல்கலைக்கழகங்களாக அல்லா மல் ஆசிரிய தொழிலுக்கான ஒழுக்க நெறிக் கோவைக்கு அமைய இலங்கை ஆசிரியர் கல்வி தொழில் வாண் மைப் பல்கலைக்கழகமாக அமைந்து செயலாற்றும்.

### தொழில் வாண்மைப் பல்கலைக்கழகம்

வாண்மை என்பது உயர் தொழில் அந்தஸ்தைக் குறிக்கின்றது. கடுமையான ஒழுக்கம் நிறைந்த பயிற்சியும், சிறப்புத் தேர்ச்சியும் இதற்கு அடிப்படை களாகும். இவ்வகையில் உலகளாவிய ரீதியில் தொழில் வாண்மைப் பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. ஏனைய பல்கலைக்கழகங்களும் தொழில் வாண்மைப் பல்கலைக்கழக செல் நெறியை நோக்கி நகருகின்றன. இலங்கையில் தற்போதைய கல்விச் சீர்திருத்த முன்மொ ழிவில் தொழில் வாண்மைப் பல்கலைக்கழகங்களாக ஆசிரியர் கல்வி, தாதியர் கல்வி என்பவை உருவாக்கப் படுவதுடன் முதலாவது நகரப்பல்கலைக்கழகம் ஜனாதி பதியால் திறந்து வைக்கப்பட்டுள்ளது இவ்வகையில் ஆசிரியர் தொழில் வாண்மைப் பல்கலைக்கழகம்.

ஆசிரியர் வாண்மைக்குரிய சிறப்பான கல்வி, ஒழுங்கமைப்பு, ஒழுக்கம், மனப்பாங்கு, தொழில்நுட்பம், பிரயோகம் என்பவற்றின் வழியாக மாணவர்களுக்கு அர்ப்பண சேவையாற்றும் திறன்களை வழங்குதல்.

ஆசிரியர் வாண்மைத் தொழிலை மேற்கொள்ள பொருத்தமான சம்பளத்தைப் பெறுவதுடன் அதற்கு அப்பால் அவர் மாணவர்களுக்கும், சமூகத்திற்கும் ஆற்றும் தொண்டு மேலானது என உறுதிப்படுத்தல்.

பட்டம் பெற்றோர் தொழில் வாண்மைச் சங்கத்தி னூடாக ஒழுக்க நெறிக்கோவைக்கு உட்படல். கற் பிப்பதற்கான அனுமதிப்பத்திரம் பெறுதல்.

ஆசிரியர்வாண்மைப்பட்டபயிற்சியைப்பெற்றவர்கள் தவிர்ந்த பிறரால் குறித்த வாண்மையை மேற்கொள்ளா திருப்பதற்கான சட்ட வரையை அமுலாக்கல்.

தொடருறுகல்வி, இரண்டாம் பட்டம், ஆய்வுகள், நூல் வெளியீடுகள், புலமைப் பரிசில்கள் வழங்குவதுடன் சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் இணைந்த செயற் திட்டங்களையும், கலாநிதிப்பட்ட ஆய்வுகளையும் நடைமுறைப்படுத்தல்.

பாடசாலைகளின்கல்வி, நிர்வாகப்பிரச்சினைகளைத் தீர்க்கும் செயற்திட்டங்கள், செயல்நிலை ஆய்வுகள், கள ஆய்வுகளைப் பிரயோகித்தல்.

பாடசாலைகளுடன் மிக நெருங்கிய உயிர்ப்பான தொடர்புகளைப் பேணல். குறித்த கால இடைவெளியில் வாண்மைத்துவ செயலாற்றுகைகளை மேற்கொள்ளல்.

கல்வியமைச்சு, மாகாணக்கல்வியமைச்சு, வலயங் கள், பரீட்சைத்திணைக்களம், தேசியகல்வி நிர்வாகம், பொது அமைப்புக்கள், அரச அரசசார்பற்ற தனியார் நிறுவனங்களுடன் இணைப்பாக்கங்களை ஏற்படுத்தி நிலையான நீண்ட கால கல்வி அபிவிருத்தி செயற்தி ட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

இவ்வகையில் மனச்சாட்சியுடனும், அர்ப்பணிப்புட னும், இதய சுத்தியுடனும் ஆசிரியர்கள் தொழில் புரிய வேண்டும் என்பதையே ஆசிரிய தொழில் வாண்மை இலக்கணப்படுத்துகின்றது. இத்தகைய நிலையில் இருக்கும் ஓர் ஆசிரிய வாண்மையாளர் தொழில் திருப்தி யைக் கொண்டிருப்பார். இவ்வாறான முழுநிறைவான ஆசிரிய வாண்மை இலங்கையில் இல்லை. ஆசிரி–யர்களும் பலவீனமாக உள்ளார்கள். இதற்குக் காரணம் இன்று வரையான பலவீனமான ஆசிரியர் கல்வி நடைமுறைகளாகும். இவற்றை நீக்க ஓர் உறுதியான பத்தொன்பது தேசிய கல்வியியற் கல்லூரிகளையும், ஆசிரிய கலாசாலைகளையும், ஆசிரிய வாண்மை நிலையங்களையும் ஒருங்கிணைத்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினர் அங்கீகாரத்துடன் சுயா தீனமான புலமை சார் சுதந்திரத்துடன் கூடிய தன்னாதிக் கமுள்ள அமைப்பினூடாக இலங்கை ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகத்தை உருவாக்க வேண்டும்.

### புலமைசார் சுதந்திரம்

தொழில் வாண்மைப் பல்கலைக்கழகங்களிலோ அல்லது ஏனைய பல்கலைக்கழகங்களிலோ பணியாற் றும் கல்வியியலாளர்கள், விரிவுரையாளர்கள் புலமை யாளர்களாவார். அவர்கள் புத்திஜீவிகளாக மாண வர்களுக்கும், நாட்டுக்கும் பயனுள்ள செயற்பாடுகளைச் செய்யும் சுதந்திரமுடையவர்களாக இருக்க வேண்டும். தமது புலமை சார் சுதந்திரத்தை பிரயோகிக்க உரிய தகுதிப்பிரமாணங்களைத் தாமே ஒழுக்க நெறிக்கூடாக பின்பற்ற வேண்டும். அவ்வாறு இல்லாமல் வேறு ஒரு நிறுவனத்தின் பொருத்தமற்ற கட்டுப்பாடுகளுடன் செயற்பட்டால் கல்வியின் தரம் குறையும். இது உலக கல்வி மதிப்பீட்டு நியதி. எனவே புலமை சார் சுதந்திரம் இங்கு முதன்மை பெறுகின்றது.

இன்று தேசிய கல்வியியற்கல்லூரிகளிலும், ஆசிரியர் கலாசாலைகளிலும், ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவனங்களிலும் கல்வியியலாளர்கள் உயர் புலமையாளர்களாகவே சேவையாற்றுகின்றார்கள். அவர்கள் இலங்கையின் ஏனைய சேவைத்தர உத்தியோகத்தர்களை உயர் வான பல பட்டங்களை நிறைவு செய்துள்ளார்கள்.



ஏனைய சேவையாளர் களை விட கூடுதலான நேரம் கடமையாற்றுகின் றார்கள்.

புலமையாளர்கள் என்ற வகையில் பல்வேறு வகை யான கல்வியியல் ஆய்வு களில் ஈடுபடுகின்றார்கள். ஆய்வுகள், செயல்நிலை ஆய்வுகளுக்கு மேற்பார் வையாளர்களாகக் கடமை யாற்றுகின்றனர். ஆய்வுச் சமர்ப்பிப்புக்களை மேற் கொள்கின்றார்கள்.

தமது புலமைசார் அறிவை தேசியக்கல்வி நிறுவகம் உள்ளூர் சர்வதேச பல்கலைக்கழகங்களின் பகுதி நேர விரிவுரையாளர் களாக ஆய்வு மேற்பார்வையாளர்களாகக் கடமை யாற்றுகின்றார்கள்.

பாடசாலை மட்ட ஆசிரிய வாண்மை விருத்திகளுக்கு வளவாளர்களாக சேவையாற்றுகின்றார்கள்.

ஆய்வேடுகள், துறைசார்நூல்கள், இலத்திரனியல் சாதனங்கள் ஆகிய வாண்மை விருத்திசார்பாகப் புத்தாக்கங்களாக வெளியீடு செய்கின்றார்கள்.

வதிவிடத்துடன் கூடிய தேசிய கல்வியியற் கல்லூரி மாணவ ஆசிரியர்களுக்கு இரவு பகலாக, கற்பித்தல் பயிற்சி இணைப்பாடவிதானம், புத்தாக்கம், தகவல் தொழில்நுட்ப பிரயோகம், விளையாட்டு, அழகியல் தேர்ச்சிகள் ஆகியவற்றில் கல்வியியலாளர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றார்கள். இந்த வகையில் இலங்கை ஆசிரிய கல்விச் சேவையாளர்கள் ஒரு தொழில் வாண்மைப்பல்கலைக்கழகத்தின் அனைத்துச்செயலாற்றுகைகளையும் அர்ப்பணிப்புடன் செய்து வருகின்றார்கள். எனவே, அவர்களின் புலமை சார் வாண்மைத்துவம் உறுதிப்படுத்துகின்றது. எனவே, விரைவாக இலங்கை ஆசிரியர் கல்விப்பல்கலைக் கழகத்தை ஸ்தாபிக்க முடியும்.

கல்விசார் புலமைச்சுதந்திரத்தை நிலைநாட்டி ஒளிமயமான ஆசிரிய வாண்மைக் கல்வியை வழங்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழ் சுதந்தி ரமான தன்னாதிக்கமுள்ள அமைப்பினூடாக இப்பல் கலைக்கழகத்தை செயலாற்ற வைக்க வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பிரச்சினைகள், தடைகள், சிக்கல்கள் ஏற்படும். அவற்றை வந்து பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும். நாட்டின் எதிர்காலக் கல்வி அபிவிருத்தி ஆசிரிய வாண்மைக் கல்வி அபிவிருத்தி யிலேயே தங்கியுள்ளது.

எனவே அரசாங்கமும், தொழிற்சங்கங்களும், கொள்கையாக்க நிபுணர்களும் இலங்கையின் எதிர் கால கல்வி அபிவிருத்தியை மையமாகக் கொண்டு இலங்கை ஆசிரியர் கல்விப்பல்கலைக்கழகத்தை மிக விரைவில் ஆரம்பிக்க வேண்டும்.

# கதிர்காமத்தில் ரிமோட் கொன்ரோலுடன் மட்டக்களப்பைச் சேர்ந்த இரு இளைஞர் கைது

கதிர்காமத்தில் தொலைக்காட்சியின் ரிமோட் கொன்ரோலுடன் மட்டக்களப்பை சேர்ந்த இரு இளைஞர்களை சந்தேகத் தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கதிர்காமம் பொலிஸார் தெரிவித் தனர்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள ஞானசூரியம் சதுக்கத்தைச் சேர்ந்த இரு நண்பர்கள் தாம் கொக்கட்டிச் சோலை கோவிலுக்கு மோட்டர் சைக்கி ளில் சென்று வருகிறோம் என தெரிவித்து ஞாயிற்றுக்கிழமை வீட்டை விட்டு வெளி யேறி கதிர்காமத்துக்குச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் கதிர்காமத்து பொலிஸ் சோதனைச் சாவடியில் சம்ப வதினமான ஞாயிறு இரவு இராணு வத்தினர் வீதிச் சோதனையில் இவர் களை நிறுத்தி சோதனையிட்டபோது இவர்களின் பையில் ரிமோட் கொன்ரோல் மற்றும் பற்றி, ரோப்ரோல்கள் இருப்பதைகண்டு சந்தேகத்தில் 23 வயதுடைய மனேகர் கிசோக், 23 வயதுடைய கிருபைரெட்ணம் சதுர்சன் ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

இவர்கள் வீட்டில் கொக்கட்டிச்சோலை கோவிலுக்கு போகிறோம் என பொய் சொல்லிவிட்டு கதிர்காமம் கோவிலுக்கு சென்றுள்ளனர் எனவும் சோல்டர் பையில் வீட்டின் உள்ள தொலைக் காட்சியின் ரிமோட் கொன்ரோலை சகோ தரன் விளையாட்டுக்காக குறித்தபையில் ஒளித்து வைத்திருந்த நிலையில் அந்தபையில் உடுப்புக்களை எடுத்து வந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந் துள்ளது

இதில் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக அவர்களது பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் போக்குவரத்து களுக்கிடையிலான போக்குவரத்து தடையைமீறி பிரயாணித்துள்ளனர் எனவும் இவர்கள் தொடர்பான விசார ணைகள் மேற்கொண்டு வருகிறோம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# எழுத்தறிவு போதிக்கும் கரங்களே நம் நாட்டின் எதிர்கால அரண்கள்

**- செல்வி விநாயகமூர்த்தி -**

இன்று ஆசிரியர் தினம்.
அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

கற்பித்தல் என்பது உலகில் செல்வாக்கு செலுத்தும் ஓர் பணி. உலகில் ஒக்டோபர் 06 ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகின்றது.

எங்கே நடப்படுகிறாயோ, அங்கயே விதையாகு என்பது பொன்மொழியாகும். ஒரு நாட்டின் சிறந்த கல்வியாளரை கௌரவிக்க அல்லது அந்த நாட்டில் கல்வி யில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை கொண்டாட அந்ததந்த நாடுகளில் ஆசிரியர் நாள் வெவ்வேறு திகதிகளில் கொண்டாடப்பட்டாலும் 1994 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் ஒக்டோபர் 06 இல் எமக்கு மகத்தான வாழ்வை வாழ வழியமைத்துக்கொடுத்த ஆசிரியர்களை பாராட்டி கௌரவிப்பதற்காக ஆசிரியர் நாளாக கொண்டாடப்படுகிறது.

ஆசிரியரை பாராட்டும் நாளான இன்றைய தினத்தை முன்னைய ஆண்டுகளைப்போல் சிறப்புற கொண்டா முடியாத சூழ்நிலைக்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம். கொரோனாத் தொற்று காரணமாக ஏறத்தாழ் 06 மாதங்களாக பாடசாலைகள் மூடப்பட்டு மாணவர்கள் வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர். ஆனாலும் எம் வாழ்வில் வழிகாட்டியாக நின்றவர்களை அவர்களுக்கான நாளில் பாராட்டாமல் இருந்துவிட முடியாது.

ஆசிரியர்கள் மனித வரலாற்றில் பிரிக்க முடியாத மனித சமுதாயத்தின் அச்சாணியாக விளங்குவதுடன் வாழ்க்கை என்ற பாடத்தை கற்பித்து மாணவர்களுக்கு ஒரு உண்மையான வழிகாட்டியாக விளங்குபவர்கள் ஆசிரியர்களாவர். ஒரு மனிதன் வாழும் காலம் முதல் அவன் மரணித்த பின்பும் பிறமனிதர்களால் போற்றப்படுவர். பலர் மனங்களில் ஒரு சிலர்தான் வாழவும் முடியும். ஆளவும் முடியும். அதில் ஆசிரியர் தொழிலில் இருப்பவர்கள் முதன்மை வகிக்கின்றனர். இவ்வுலகில் எத்தனையோ தொழில்கள் இருந்தாலும் போற்றுதலுக்கும் மதித்ததலுக்கும் உரிய துமான தொழில் ஆசிரியர் தொழிலாகும்.

மற்ற பணிகளைப்போல ஆசிரியர் பணி என்பது ஒருவரின் வாழ்வாதாரத்திற்கான பணியல்ல. தனது வாழ்வையே ஆதாரமாக்கும் பணி. அந்தப்பணியில் வேண்டுமானால் வாழ்வை நகர்த்துவதற்கான ஊதியம் கிடைக்கலாம். ஆனால் ஊதியத்திற்கான பணியல்ல என்பதுதான் ஒரு ஆசிரியரின் சிறந்த தத்துவமாகும். ஆசிரியர் பணி ஓர் உயிரோட்டமான பணி என்பதுடன் ஆய்வுரீதியான, உளவியல் ரீதியான, சேவை ரீதியான, கால நேரமற்ற அர்ப்பணிப்புள்ள பணியாகவே கொள்ளமுடியும். இங்கு வெறும் கல்வியை மட்டும் போதிக்காது ஒழுக்கம், பண்பு, ஆன்மீகம், பொது அறிவு என அனைத்தையும் மாணவர்களுக்கு எடுத்துக்கூறி அவர்களை சிறந்த மனிதர்களாக்கும் உன்னத பணி எமது ஆசிரியர்களுக்கே உண்டு.




ஒரு சிறந்த ஆசிரியர் வகுப்பறைக்குள் மட்டுமே ஆசிரியர்களாக இருப்பதில்லை. இருக்கவும் முடியாது. அவர் தம் வாழ்வில் பெரும் பகுதி நேரங்களை ஆசிரியர்களாகவே கடத்துகின்றனர். அவர்களின் சேவைக்கு எல்லை கிடையாது. மனித வாழ்வில் திருப்பு முனையை ஏற்படுத்தி அதற்கு அர்த்தத்தை கொடுக்கும் ஒரு கடமை ஆசிரியருக்கு உள்ளது.

உலகிலுள்ள பணிகளிலே சிறந்த பணி ஆசிரியர் பணி என்று சொல்லுமளவிற்கு பாரிய பொறுப்புக்கள் கொண்டதாகும். இந்தப் பணிக்கு சிறந்த ஆளுமைமிக்க, ஒழுக்கமிக்க, தகுதியான நபர்களை தெரிவு செய்வது ஓர் அரசின் பொறுப்புமிக்க கடமையாகும்.

சமூகத்தின் ஏணிகளாகவும் தோணிகளாகவும் இருந்து மனித வாழ்வில் வழியேற்பட பாலங்களை அமைத்துள்ள ஆசிரியர்களது பொதுவான பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராயப்பட வேண்டிய நாளும் இன்றாகும்.

ஆசிரியர்கள் இந்தப்பணியை மிகவும் தியாக உணர்வுடனும் பொறுப்புணர்வுடனும், கடமையுணர்வுடனும், பணியாற்ற வேண்டும். ஏனெனில் பொதுவாக இன்றைய ஆசிரியர்கள் சம்பளத்துக்கு வேலை பார்க்கும் ஆசிரியர்களாகவே தம் தொழிலைப் பார்க்கின்றனர். பொதுவாக பாடசாலையில் கற்பிப்பதை விட தனியார் கல்வி நிலையங்களிலும் இணையவழி கற்பித்தலிலும் ஆர்வம் காட்டுகின்றமையையும் இலாபமீட்டுவதையுமே இன்றைய காலத்தில் முனைப்பாகக் கொண்டுள்ளனர்.

பொதுவாக தனியார் கல்வி நிலையங்களிலும் இணையவழி வழியிலும் கற்பித்தல் முறைகளில் காட்டும் முனைப்பு பாடசாலைகளிலுள்ள வகுப்பறைக் கல்வியில் இல்லை. இது இன்று ஒரு புறம் பெரும் குறைபாடாகவே காணப்பட மறுபுறத்தே பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தாம் கற்பிக்கும் பாடத்திட்டங்களில் தெளிவின்மை, கற்பித்தல் முறையில் தெளிவின்மை,

ஆளுமையற்ற சூழ,ல் தனக்கு பிடித்த மாணவர்களை மட்டும் பாராட்டுதல், ஊக்குவித்தல், கற்பித்தல் செயற்பாடுகளை மந்தமாக மேற்கொள்ளல் போன்றவற்றோடு மந்தமான மாணவர்களை மட்டம் தட்டுதல் என பல்வேறுபட்ட குறைபாடுளை இன்றைய மாணவர்கள் எதிர்நோக்குகின்றனர். இது தொடர்பில் பல்வேறுபட்ட வாதப்பிரதிவாதங்களை முன்வைத்தாலும் இவற்றுக்கு எதிர்மறையான கண்ணியமிக்க, தன் கடமையை செவ்வனே செய்கின்ற ஆசிரியர்களும் எம் சமூகத்தில் இல்லாமலில்லை.

அதேவேளை சமீபத்திய காலங்களாக மாணவர்கள் மீது பாலுணர்வை தூண்டும் அல்லது பாலியல் ரீதியான சேட்டைகள் செய்யும் ஆசிரியர்களின் நடவடிக்கைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளன. பெற்றோர் மத்தியிலும் சமூகத்தின் மத்தியிலும் இவர்கள் தொடர்பில் அச்சத்துடன் நோக்கும் சம்பவங்களும் அதிகரித்தும் வருகின்றன.

மாதா, பிதா, குரு என்னும் மூன்றாவது படிமுறையில் பெற்றோருக்கு அடுத்த இடத்தில் வைத்து நோக்கப்படுகின்ற ஆசிரியர்கள் அந்த மாணவர்களின் வாழ்வின் ஏணியாக இருக்க வேண்டுமே தவிர வீழ்ச்சியின் திறவு கோலாக என்றுமே மாறிவிடக்கூடாது.

வகுப்பறைகள் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கிடையே நல்லுறவை கட்டியெழுப்பும் இடமாக அமையவேண்டுமே தவிர, மாறாக குரோதம், வன்மம், போட்டி, பொறாமை என்பவற்றை வளர்க்கும் இடங்களாக இருத்தல் கூடாது. ஆனால் இன்றைய மாணவர்கள் மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் காயப்படும் இடங்களாக வகுப்பறைகள் மாறிப்போயிருப்பது வேதனையளிக்கும் ஒரு விடயமாகும்.

எனவே மாணவர்களின் நலமே பெரும் பரிசு. எதிர்கால சமூகத்தை வடிவமைக்கும் பாரிய பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ள ஆசிரியர் சமூகம் தங்கள் பணியை திறம்பட செய்து மாணவர் உலகில் மாற்றத்தை கொண்டுவருவது மட்டுமன்றி நல்ல சந்ததியினரை – தலைமுறையை – உருவாக்கிட முன்வருவதல் வேண்டும்.

தன் தேவைக்காக பணி செய்திடாமல் சேவையாக நினைத்து பணி செய்திடும் தன்னலமற்ற ஆசிரியர் அனைவருக்கும் ஆசிரியர்தின நல் வாழ்த்துகள்.

## குருவடியைத் திருவடியாய் மனமெண்ணி மகிழ்வோம்!

– மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா –
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)

எழுத்தை அறிவித்து எம்மகத்தைத் திறந்திட்ட
பழுத்த அறிவுடைய பக்குவமே குருவாவாவர்
நிலத்தை வளமாக்கி நிறைவளத்தைக் காணுகின்ற
மனத்தை உடையவரே மாண்புடைய குருவாவார்

அகமுறையும் அழுக்ககற்றி அறிவுச்சுடர் ஏற்றிவைத்து
ஆதவனாய் ஒளிவிடுவார் அவரேநற் குருவாவார்
செவிநுகரப் பலதருவார் சிறியவற்றை ஒதுக்கிடுவார்
புவியதனில் பெருந்துணையாய் பொருந்திடுவார் குருவாவார்

கற்பவற்றைக் காட்டிடுவார் கருத்தமர வழியாவார்
நிற்பதற்கும் நடப்பதற்கு நீள்வழியும் ஆகிடுவார்
நற்பதத்தைத் தேர்ந்திடுவார் நாளுமதை மொழிந்திடுவார்
இப்புவியில் நல்வரமாய் வாய்த்தவரே குருவாவார்

இலக்கியமு மாவார் இலக்கணமு மாவார்
தலைக்கனமே இல்லா தரமான குருவாவார்
உலைக்களமாய் இருப்பார் உருக்கியே எடுப்பார்
நிலைத்திடவே வைக்கும் நிறை குருவுமாவார்

மெஞ்ஞானம் விஞ்ஞானம் சொல்ஞானம் தருவார்
அஞ்ஞானம் அகல்வதற் கவர்விளக் காகிடுவார்
கல்ஞானம் கல்ஞானம் எனவுரைத்து நிற்பார்
நல்ஞானம் மிக்குடையார் நம் குருவுமாவர்

காவியமும் அறிவார் ஓவியமும் அறிவார்
கணிதமும் தெரிவார் கற்சிலையும் வடிப்பார்
வானிலையும் சொல்வார் வைத்தியமும் சொல்வார்
வாழ்க்கையிலே வளமாய் வந்தமைந்தார் குருவாய்

தலைதொட்டு நாளும் தலைநிமிர வைப்பார்
தலைகுனியும் செயலை தலைகுனிய வைப்பார்
உலகிடையே வாழ உயர்கருத்தை விதைப்பார்
உணர்வுடனே கலந்து உள்ளுறைவார் குருவாய்

குருவாசி பெற்றிடுவார் குவலயத்தில் சிறப்பார்
குருவாசி கிடைத்திடுதல் பெரு வரமேயாகும்
குருவாய்த்தல் யாவருக்கும் நல் வரமேயாகும்
குருவடியைத் திருவடியாய் மனமெண்ணி மகிழ்வோம்

(இன்று ஆசிரிய தினம். அதை ஒட்டி இந்தக் கவிதை பிரசுரமாகின்றது)

காலைக்கதிர் Kalaikkathir

# லொஹானுக்கு எதிரான மனு: 8 அரசியல் கைதிகளுக்கும் உரிய பாதுகாப்பு வழங்குக! உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவு

**இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவுக்கு எதிராக மனுத் தாக்கல் செய்துள்ள 8 தமிழ் அரசியல் கைதிகளுக்கும் போதிய பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு ஆலோசனையளிக்குமாறு சட்ட மா அதிபருக்கு உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.**



கடந்த மாதம் 12ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவால் அநுராதபுரம் சிறைச்சாலையில் துப்பாக்கி முனையில் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது எனக் குறித்த சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பூபாலசிங்கம் சூரியபாலன் உள்ளிட்ட 8 தமிழ் அரசியல்கைதிகள் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்துள்ள னர்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சராக செயற்பட்ட இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த கடந்த 12ஆம் திகதி மாலை அநுராதபுரம் சிறைச்சாலைக்கு வருகை தந்து, தாம் உள்ளிட்ட சில கைதிகளை சிறைக் கூடத்தில் இருந்து வெளியில் அழைத்து கொலை மிரட்டல் விடுத்தமையினூடாக தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என அறிவிக்குமாறு மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த அடிப்படை உரிமை மனுக்கள் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, முர்து பெர்னாண்டோ மற்றும் எஸ். துரைராஜா உள்ளிட்ட நீதியரசர் குழாம் முன்னிலையில் நேற்று பரிசீலிக்கப்பட்டன.

மனுக்கள் தொடர்பிலான எழுத்து மூல ஆட்சேபனையை எதிர்வரும் 14 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபர் உள்ளிட்ட பிரதிவாதி தரப்பு மற்றும் மனுதாரர் தரப்புக்கு உத்தரவிட்ட நீதியரசர் குழாம், வழக்கை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது.

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, நீதி அமைச்சர் அலி சப்ரி, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகர் எச்.ஆர். அஜித் உள்ளிட்டோர் இந்த வழக்கின் பிரதிவாதிகளாவர்.

நேற்றைய வழக்கு விசாரணையில் மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி மொஹான் பாலேந்திராவின் நெறிப்படுத்தலில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், சட்டத்தரணி கேசவன் சயந்தன் மற்றும் சட்டத்தரணி ஜெயசிங்கம் ஆகியோர் முன்னிலையாகி இருந்தனர்.

# விரைவில் புதுடில்லி பறக்கும் கூட்டமைப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினரை பேச்சுக்காக விரைவில் புதுடில்லிக்கு அழைக்கவுள்ளது இந்திய மத்திய அரசு.

இந்தத் தகவலை இந்திய வெளிவிவகார செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா, இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் நேரில் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் திங்கள் மாலை நடைபெற்ற சந்திப்பின் பின்னர் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தங்களை விரைவில் மீண்டும் புதுடில்லியில் சந்திப்போம். அந்தச் சந்திப்புக்கான திகதி இந்தியத் தூதரகம் ஊடாக அறிவிக்கப்படும் என்று இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளார் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

## பரீட்சைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த இரண்டு பரீட்சைகளையும் குறிப்பிட்ட காலத்துக்கு ஒத்திவைக்க வேண்டும் என்பது தமது நிலைப்பாடு எனவும் அவர் தெரிவித்தார்.

சபையில் நேற்று ஸ்ரீலங்கா பொது ஜனமுன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார எழுப்பிய வாய் மொழி மூல கேள்விக்கு நாடாளுமன்றில் நேற்று பதிலளித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பரீட்சைகளை ஒத்திவைக்குமாறு பல்வேறு கோரிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்தார்.

## மேலும் 40 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

13 ஆயிரத்து 142 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 40 பேரில் 22 ஆண்களும், 18 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 3 ஆண்கள், பெண் ஒருவர் என 4 பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 36 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 19 ஆண்களும், 17 பெண்களும் அடங்குகின்றனர்.

## பட்டா ரக வாகனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிரே வந்த பட்டா ரக வாகனம் மோதியதாலேயே விபத்து ஏற்பட்டுள்ளது.

வீதியோரத்தில் தரித்திருந்த வாகனம் ஒன்றை முதியவர் கடந்து செல்ல முற்பட்டபோதே எதிரே வந்த வாகனம் மோதியதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் சாவகச்சேரியைச் சேர்ந்த நடராசா பொன்னுச்சாமி (வயது 64) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திட்டமிடப்பட்டிருந்த போதிலும், நாட்டில் நிலவும்

கொரோனாப் பெருந்தொற்று நிலைமைகள் காரணமாக பட்டமளிப்பு விழாவில் பெருமளவானோர் ஒன்றுகூடுவதற்கு அனுமதிக்க முடியாது என்றும், அதனை நிகழ்நிலையில் நடத்துவதற்குத் தடை ஏதுமில்லை என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்தியிருந்த நிலையில் மாணவர்களின் பட்டங்களை உறுதிப்படுத்துவதற்காக நாளை 7ஆம் திகதி நிகழ்நிலைப் பட்டமளிப்பு விழாவை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

இதன்படி, நிகழ்நிலையில் நாளை காலை 9 மணி முதல் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில், கைலாசபதி கலையரங்கில் இரண்டு அமர்வுகளாகப் பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது.

பட்டமளிப்பு விழாவை யாழ். பல்கலைக் கழகத்தின் யுரியூப் மற்றும் முகப்புத்தக பக்கம் ஆகியவற்றினூடாக நேரலை மூலம் பார்வையிட முடியும் எனவும், பட்டம் பெறுபவர்களுக்கு நேரலைக்கான இணைப்புக்கள் தனித்தனியாக மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன எனவும் துணைவேந்தரின் ஊடகப் பிரிவின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம், நாடு வழமைக்குத் திரும்பியதும் மாணவர்களுக்கான சம்பிரதாய பூர்வ பட்டமளிப்பு விழா நடத்தப்படும் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சந்திப்புகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முற்போக்குக் கூட்டணியினர், ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தரப்பினர் உள்ளிட்டோரை தனித்தனியே சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

## அரசின் கோர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தின் நேற்று நடைபெற்ற பெறுமதிசேர் வரி திருத்தச் சட்டமூல விவாதத்தில் சிறீதரன் எம்.பி. உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:-

இம்மாதம் முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது. அன்றைய தினமே இலங்கை அரசால் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளையமகன் பாலச்சந்திரனின் 25ஆவது அகவை நாளாகும்.

முள்ளிவாய்க்கால் மண்ணில் கொத்துக்கொத்தாகத் தமிழர்களைக் கொன்றொழித்த இனவாத அரசின் கோர முகத்தை இந்த உலகுக்குக் காண்பித்த ஆகப்பெரும் போர்க் குற்றச் சாட்சியமாக இசைப்பிரியாவின் இறுதிக் கணங்களும், பாலச்சந்திரனின் படுகொலையும் அமைந்திருந்தது.

சுற்றிவர மண்மூட்டைகளால் சூழப்பட்ட ஓர் மரப்பலகையில், கையில் ஒரு பிஸ்கட் பக்கற்றும், கையருகே ஓர் நீர்க்குவளையுமாக, எந்தச் சலனமுமற்று எதையோ வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்த பன்னிரு வயதுப் பாலகன் பாலச்சந்திரனின் புகைப்படத்தையும், அதே பாலச்சந்திரன் மேலாடையற்ற மார்பில் ஐந்து துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்த அடையாளத்தோடு, உயிர்பிரிந்த நிலையில் தரையில் கிடந்த புகைப்படத்தையும் சனல். – 4 தொலைக்காட்சி வெளியிட்ட அந்தக் கணங்கள், உலகப் பரப்பெங்கும் வாழும் இதயமுள்ள ஒவ்வொரு மனிதர்களையும் இனம், மொழி, மதம் கடந்து இரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்திருந்தது.

தமிழீழத் தேசியத் தலைவராக, தமிழர்கள் தம் நெஞ்சில் வைத்துப் பூசித்த வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளைய மகன் என்ற ஒற்றைக் காரணமே, பன்னிரண்டு வயதுப் பாலகனான பாலச்சந்திரனை கோரமாகப் படுகொலைசெய்த இந்த இனவெறி அரசின் உயிர்ப்பலிப் பசிக்குப் போதுமானதாக இருந்தது.

தமிழ் சிறுவர்களுக்கு உள்ள உயிர் வாழும் உரிமைகூட இலங்கையில் பறிக்கப்படுகின்றது. இறுதிப் போரில் பல சிறுவர்கள் கொல்லப்பட்டனர்.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் திகதி தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை முதல் 2008ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி வரையில் 1,929 இற்கும் அதிகமான சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று வடக்கு, கிழக்கு மனித உரிமைகள் செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது – என்றார்.

அத்துடன் கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கில் சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்ட பல்வேறு சம்பவங்களையும் சிறீதரன் எம்.பி. பட்டியலிட்டார்.

அவரின் இந்த உரையால் விசமனடைந்த அரச தரப்பு எம்.பி.க்கள், அவரது உரைக்குக் கடுமையான எதிர்ப்புக்களைத் தெரிவித்தனர். கூச்சலிட்டனர். கடும் தர்க்கம் புரிந்தனர்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார உள்ளிட்ட ஆளுங்கட்சி உறுப்பினர்கள், சர்வதேசத்தை இலக்கு வைத்து சிறீதரன் உரையாற்றுகின்றார். சிறீதரன் கூறுவது எல்லாம் கடந்த காலங்களில் இடம்பெற்றவை. அப்படி என்றால் சிறிமா போதி, தலதா மாளிகை உள்ளிட்ட இடங்களில் குண்டுகளை வைத்தபோது அதில் சிறுவர்கள் பலியாகவில்லையா? நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிரான போர் நடைபெறவில்லை. பயங்கரவாதிகளுக்கு எதிராகவே போர் நடைபெற்றது என்று வாதிட்டனர்.

மேலும் சிறீதரன் எம்.பியின் இனவாதக் கருத்துக்களை ஹன்சாட்டில் இருந்து நீக்க வேண்டும் எனவும் ஆளுந்தரப்பினர் கோரிக்கை விடுத்தனர். எனினும், பல்வேறு இடையூறுகளுக்குமத்தியிலும் சிறீதரன் எம்.பி. தனது உரையைத் தொடர்ந்தார்.